1749

1803. DECEMBER 1927 Vol. V No.5

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 MAR 1928
MADRAS

லக்ஷ்மி



சொந்தக்காரர்கள்:
கே.எஸ். முத்தையா & கோ., சென்னை.

வருட சந்தா உள்நாடு ரூ. 2

அமெரிக்கன் சில்க் — — — — — அங்கவஸ்திரம்

தூய்ய வெள்ளை, உடல் திக்கானபட்டு, தினசரி, துவைத்து உபயோகிக்கலாம். வண்ணானுக்கும் போட்டு சலவை செய்யலாம். இருபக்கங்களிலும் அழகான குஞ்சம் கட்டியது. 5 முழ நீளம் 40'' அகலம்.

விலை ரூ. **6—8—0** தான்

கிடைக்கவில்லையே! என்று வருந்தவேண்டாம்

ஏற்கெனவே 70 நாட்களில் 5000 பட்டுகளுக்குமேல் செலவாகியும், ஆர்டர்கள் இன்னும் குறைந்தபாடில்லை. ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர்கள், டஜன் கணக்காய் ஆர்டர் செய்கிறார்கள் என்றால், இதன் உண்மை, நீங்களும் ஒன்று வாங்கினாலன்றி அறிய முடியாது. ஸ்டாக்கு குறைந்துவருவதால் முந்திக் கொள்ளுங்கள்!

முத்தையாவ்ஸ் பாபுலர் ஷர்ட்டுகள்

திக்கான உசத்தி டுயில், பால்போன்ற வெள்ளை, கைதேர்ந்த தையற்காரர்களைக் கொண்டு செய்த மனோகரமான கட்டிங், உறுதியான தையல், உறுதிக்கும் நீண்ட உழைப்புக்கும் உத்திரவாதம். காலருடனும், காலரில்லாமலும் கிடைக்கும். கழுத்தளவுடன் ஆர்டர் செய்யுங்கள்.

நெ. 1	டுயில் ஷர்ட் 1-க்கு விலை	ரூ. 2—0—0.
,, 2	காக்கி ஷர்ட் விலை	ரூ. 2—4—0.
,, 3	இங்கிலீஷ் டுயில் ஷர்ட்	ரூ. 2—4—0.
,, 4	அமெரிக்கன் டோரியா	ரூ. 2—4—0.
,, 5	உசத்தி பாப்ளின் ஷர்ட்	ரூ. 3—8—0.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால்பெட்டி 99, **சென்னை.**

A. S.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை எடுத்து காலணு மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்குமேற்பட்ட 96 வியாதிகளைக் சண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 4 ஷை டஜன் 1-க்கு ரூ. 2-4 ஷை சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜெ. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 3 ஷை டஜன் 1-க்கு ரூ. 2 ஷை சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதறாஸ்.

OFFICE OF THE REGISTRAR
20MAR1928
MADRAS

கையிலிருந்தாலும் அழகு!

பன்னிரு இதழ்களையும் ஒன்ருய்ச் சோத்து பைண்டு செய்யப்பட்ட "லக்ஷ்மீ" ஆண், பெண், சிறியோர், பெரியோர் முதலிய யாவரும் படித்து இன்புறக்கூடிய, கதைகள், நாவல்கள், பாடல்கள், ஹாஸ்யக் குறிப்புகள் முதலியவை அடங்கி யிருக்கின்றன. லக்ஷ்மியின் சந்தா நேயர்களுக்கும் பயன்படக்கூடியது. இன்றே ஒன்றுக்கு ஆர்டர் செய்து வரவழைத்து, உங்கள் வாசக சாலையை அழகுப்படுத்துங்கள்.

1-வது வால்யம் விலை ரூ. 3—0—0.

3-வது வால்யம் விலை ரூ. 3—0—0.

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால் பெட்டி, :: :: சென்னை.

80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

அசல்

ஷண்முகம் பட்டணம்பொடி

காரம்
மணம்
நிறம்
குணம்
வாடை
உள்ளது.

அநேக
மெடல்கள்
நற்சாட்சி
பத்திரங்கள்
பெற்றது.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட,
போஸ்டு பாக்ஸ் 140, மதருஸ்.

80 வருஷக் காலமாக சென்னையிலே சிறப்பு வாய்ந்து ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று அன்ருடம் நூற்றுக் கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினதோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலூக்கா, டவுன், கிராமம் முதல் குக்கராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும் நெய் மணம், குளிர்ந்த குணம். இன்புறும் காரம், பவுன் நிறம் மனோரம்மியம் இவ்வாறும் ஒருங்கே அமையப் பெற்றதினல் ஷண்முகம் என பெயர் பெற்று நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோ பீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்!

பலம்.		விலை.			தபால்சிலவு.			பாக்கிங்.			மொத்தம்.		
8	ரூ.	1	0	0	0	5	0	0	1	0	1	6	0
20	,,	1	12	0	0	8	0	0	2	0	2	6	0

டாக்டர். ஆர். கே. பரிமள மூக்குத்தூள். இதனல் ஜலதோஷம், ஒற்றைத் தலைவலி, மண்டைகுததல், உள்பட கண்டத்திற்கு மேற்பட்ட 103 சகல வியாதிகள் வெகு சீக்கிரத்தில் கண்டிக்கப்படுமென்பதில் சந்தேகமே கிடையாது. காலணு சாதா மூக்குத் தூளுடன் இந்தத தூள் இரண்டொரு சிட்டிகை மாத்திரம் கலந்தால் தூள் முழுவதும் சுகந்தமாய் விடும்.

1-புட்டி 1-க்கு அணு 4. டசன் புட்டிகள் ரூ. 2-4-0.
ஒரு சேர் டின் ரூ. 1-8-0.

இதர சாமான்கள் வேண்டுமானல் எங்களுக்கு விலை விபரம் எழுதவும்.

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பனி, (லிமிடெட்)
போஸ்டு பாக்ஸ் 140, மதருஸ்.

ஸ்ரீ முனியோஸா

சில்க் அங்கவஸ்திரம்.

அழகான இமிட்டேஷன் சில்க், கலருக்கு உத்திரவாதம் வண்ணானுக்குப் போடலாம். நேர்த்தியான பட்டுக்குஞ்சம் கட்டியது. பச்சை, ரோஸ், ஆரஞ்சு, வெள்ளை, பிங், புளூ முதலிய பல கலர்கள்.

5 முழம் பட்டு 1-க்கு விலை ரூபா 2—4—0.

விலை ரூபாய் இரண்டேகால்தான். உடனே எழுதுங்கள்.

☞ இதுவரை, 6-மாதத்திற்குள் 50,000, அங்கவஸ்திரங்கள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒன்று வாங்கினவர்கள் திரும்ப மறு ஆர்டர் ஒரு டஜனுக்குச் செய்கிறார்கள்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால் பெட்டி 99, சென்னை

நூல் புடவையிலும் ஓர் நூதனம்!

கராச்சி நூல் புடவைகள்

அழகான ஜரிகை முகதலையுடன் கூடியது. தினசரி சலவை செய்து உபயோகிக்கலாம், ரூ. 80—100-—விலையுள்ள புடவைகளிலிருக்கும், கரைகள்போல் ஜரிகையினால் கொடி செடி போட்டது. சிகப்பு, அரக்கு, பச்சை, கருப்பு, புளூ, ஸ்னப் முதலிய கலர்கள். கலருக்கு உத்திரவாதம்.

18 மு $\times 2\frac{1}{2}$ அகலம் புடவை 1-க்கு விலை ரூ. 12.

K. S. Muthiah & Co.

Post Box 99, : : MADRAS.

லக்ஷ்மி

சந்தா விவரங்கள்.

இந்தியா, பர்மா, ஸிலோன் போன்ற உள் நாடுகளுக்கு வருட சந்தா	ரூ.	2	0	0
தென்னுபிரிகா, மலாய் நாடு, போன்ற வெளி நாடுகளுக்கு வருட சந்தா	ரூ.	2	8	0
ஜீவிய சந்தா (உள் நாடுகளுக்கு)	ரூ.	40	0	0
ஷை (வெளி நாடுகளுக்கு)	ரூ.	50	0	0

விளம்பர விகிதங்கள்.

முழுப்பக்கம் (மாதம் 1-க்கு)	ரூ.	8	0	0
அரைப்பக்கம் ஷை	ரூ.	4	0	0
கால்பக்கம் ஷை	ரூ.	2	8	0

சிறந்த வாசனை

ஊதுவத்திகள் !

உயர்ந்த வாசனைத் திரவியங்களால், நவாப் தர்பாரில் கியாதி பெற்ற ஒருவரால் செய்யப்பட்டவை. இந்த வத்திகளை ஒரு முறை தருவித்து உபயோகித்துப் பார்ப்பீர்களாகில், மற்ற எந்த விதமான வத்திகளையும் வாங்க மாட்டீர்கள் என்று நிச்சயமாய் சொல்லுவோம். இன்றே ஆர்டர் செய்யுங்கள் ! சேர் ஒன்றுக்கு 24 ரூ. எடை. எட்டுக் கட்டுகளுடையது.

சவ்வாது வத்தி சேர்	1-க்கு	6—0—0
அம்பர் வத்தி ,,	1-க்கு	5—0—0
கிலீட் வத்தி ,,	1-க்கு	3—8—0
மட்டிப்பால் வத்தி,,	1-க்கு	2—0—0

K. S. MUTHIAH & Co.,

EXPORT DEPARTMENT,

Post Box No. 99, MADRAS.

ஓம்

லக்ஷ்மி

தமிழர்களின் முன்னேற்றத்தைக் கருதி
பிரசுரித்து வரும்

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

பத்திராதிபர் : K. S. முத்தையா

மலர் 5.	பிரபவஹு மார்கழிமீ **1927** டிசம்பர்மீ	இதழ் 5.

அட்டவணை.

பக்கம்.

1. லக்ஷ்மி துதி 215
2. முரசு 216
3. பொருளீட்டல் 217
4. நட்டாஜி அல்லது சிவாஜியின் சேனைத் தலைவன் 224
5. கண்ணப்பநாயனர் சரிதை 234
6. கடோரசித்தன் கதை 237
7. ஸ்ரீ ஹர்ஷ சரிதம்... 241
8. இந்தியர் புறமதம் புகுவதேன் 245
9. மதுசாரம் 247
10. கணித விநோதம் 255

...ணக காப்பக நூலகம்
103274
00 008

சந்தா நேயர்களுக்கு

முக்கிய கவனிப்பு.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் 30-ந் தேதியிலும் வெளியாகும்.

எப்பொழுது சந்தா நேயர்களாகச் சேர்ந்தாலும், அந்தந்த மலரின் முதல் சஞ்சிகையிலிருந்தே அனுப்பப்படும்.

பத்திரிகை நேயர்களுக்குக் கிடைக்க வேண்டிய குறிப்பிட்ட தேதியில் கிடைக்காவிட்டால் உள் நாட்டு நேயர்கள் 10-ந் தேதிக்குள்ளும், வெளி நாட்டார் 15-ந் தேதிக்குள்ளும், சந்தா நம்பருடன் ஆபீஸுக்குத் தெரிவிக்க வேண்டும்.

சந்தா நேயர்களாயிருப்பவர்கள், எவ்விஷயத்தைப்பற்றி ஆபீஸுக்கு லெட்டர் எழுதினாலும், சந்தா நம்பருடன் எழுத வேண்டும். சந்தா நம்பர் லக்ஷ்மியின் விலாசக் கவரில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

நேயர்கள் இடம் விட்டு இடம் மாறினால், மாறுதல் விலாசத்தை, 25-ந் தேதிக்குள், சந்தா நம்பருடன் தெரிவிக்க வேண்டும.

லக்ஷ்மிபால் அன்பு கொண்டுள்ள நேயர்கள் தங்கள் பந்து மித்திரர்களையும், லக்ஷ்மிக்கு சந்தா நேயர்களாகச்சேர்த்துவிடக் கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால்பெட்டி, 99. சென்னை.



லக்ஷ்மி துதி

சொன்னங் கொடுப்ப தொன்றே திரு
    மாதருள் தோற்ற மென்றுஞ்

சின்ன மதிப் புலவீர் நன்மையாவு
    மச் செல்வி யங்கே

கன்னவின் சொல்லவள் சேய் மனை
    யாட்டி கனிந்தருள்வது

இன்ன லெல்லா மவண் முன் பிறந்தாள்
    பங் கெனச் சொன்மினே.

முரசு

(முன் தொடர்ச்சி)

24. உடன் பிறந்தார்களைப் போலே—இவ்
வுலகில் மனிதரெல் லாரும்
திடங் கொண்டவர் மெலிந்தோரை—இங்கு
தின்று பிழைத்திட லாமோ?

25. வலிமையுடையது தெய்வம்—நம்மை
வாழ்ந்திடச் செய்வது தெய்வம்
மெலிவு கண்டாலுங் குழந்தை—தன்னை
வீழ்த்தி மிதித்திட லாமோ?

26. தம்பி சற்றே மெலிவானால்—அண்ணன்
தானடிமை கொள்ள லாமோ?
செம்புக்குங் கொம்புக்கு மஞ்சி—மக்கள்
சிற்றடிமைப் பட லாமோ?

27. அன்பென்று கொட்டு முரசே—அதில்
யார்க்கும் விடுதலை யுண்டு
பின்பு மனிதர்க ளெல்லாம்—கல்வி
பெற்றுப் பதம் பெற்று வாழ்வார்.

28. அறிவை வளர்த்திட வேண்டும்—மக்கள்
அத்தனை பேருக்கு மொன்றாய்
சிறியரை மேம்படச் செய்தால்—பின்பு
தெய்வ மெல் லோரையும் வாழ்த்தும்.

29. பாருக்குள்ளே சமத்தன்மை—தொடர்
பற்றுஞ் சகோதரத் தன்மை
யாருக்குந் தீமை செய்யாது—புவி
யெங்கும் விடுதலை செய்யும்.

30. வயிற்றுக்குச் சோறிடவேண்டும்—இங்கு
வாழு மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பல கல்வி தந்து—இந்தப்
பாரை யுயர்த்திட வேண்டும்.

31. ஒன்றென்று கொட்டு முரசே—அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே
நன்றென்று கொட்டு முரசே—இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.

(முற்றிற்று.)

—பாரதி.

பொருளீட்டல்

(வேலூர் ச. கு. கணபதி எழுதியது.)

செல்வச் சிறப்பு.

'பொருளிலார்க் கிவ்வுலகமில்லை' என்று ஆன்றோர் கூறியாங்கு, செல்வமானது உலக வாழ்விற்கு உற்ற துணையெனக் கருதப்படுகின்றது. பொருள் ஒன்று மட்டுமிருந்துவிட்டால் ஏனைய ஊண், உடை, உறைவிடம், வேறு பல வசதிகள் முதலியவற்றை எளிதிற் பெறலாகும். உலகத்தில் ஒருவர் எய்தத்தக்க எவ்வித இன்பத்திற்கும் காரணமாயிருத்தலின் செல்வம் 'ஆக்கம்' எனப்படும். 'ஆக்கம்' என்னுஞ் சொற்கு 'ஆக்குவது' எனப் பொருளுரைப்பர் பெரியோர். தன்னைப் பெற்றிருப்பா னொருவனை உளனாக்குவது எனினும் அமையும். 'பொருளிலான் செத்தாரின் வைக்கப்படும்' என்றதனுல் இப்பொருள் கொள்ளப் படுவது காண்க. மானிடர் பெறத்தக்க பேறுகள் நான்காம்: அவை அறம், பொருள், இன்பம், வீடெனப்படும். இந் நான்கினும் இறுதிக்கட் கூறப்பட்ட வீடுபேற்றினை யொழிய வேனைய மூன்றும் இம்மையின் கண்ணே பெறப்படுவன.

'வடுவிலாவையத்து மன்னிய மூன்றுள்
நடுவணதெய்த இருதலையும் எய்தும்' (நாலடியார்)

எனக் கூறியாங்கு பொருள் ஒன்றுமே அறத்தையும் இன்பத்தையும் ஒருங்கே யாக்கு மென்பதுணரப்படும்.

இனி அறிஞர்கள் அவாவினை மண்ணுசை, பெண்ணுசை, பொன்னுசை என மூன்றன்பாற் படுத்துக் கூறுப. அவற்றுள் இளஞ்சிறுரும், விருத்தரும், அலிகளும் பெண்ணுசைக்குப் புறம்பானவர்கள். மண்ணுசையிலாதாரு முண்டு. ஆயினும் பொன்னுசை நீத்தாரைக்காண்டல் அரிதினும் அரிய தொன்றும். எனெனின், முற்றத்துறந்த முனிவரும் உஞற்றுஞ் செயல்கட்குப் பொன் இன்றியமையாமையைக் காண்க. 'முனிவரும் மன்னரும் உண்ணுவ பொன்னல்

முடியுமெனக்' கூறிப்போந்த மணிவாசகனர் திருவாக்கு இதற்குச் சான்று பகரும், இன்னனைய பொருள்களை யெல் லாம் நோக்குழி, உலக வாழ்விற்குச் செல்வம் இன்றியமை யாத தென்பது பெற்றாம்.

வறுமைத் துன்பம்.

பொருளிலார் வறிய ரெனப் படுவர். வறியர் உண் பனவு முடுப்பனவு மற்றுத் தங்குவதற்குச் சாணிடமும் பெறாது வருந்துவர். வறுமைத்துன்பம் ஒன்றினுனே பல துன்பங்களும் விளையு மென்க! முழுதும் கெடுக்கும் மிடி (கந்தரலங்காரம்) என்றமையும் காண்க.

அறிவுவளர்ச்சிக்குப் பெருந்தடையாய் நிற்பதும் வறு மையே. 'வித்தைக்குச் சத்துரு விசனம் தரித்திரம் என்ற பழ மொழி இங்கு ஆராய்தற் பாற்று. அடிமைகளைப் பெருக்குவதும் வறுமையே இயல்பற்ற மரணத்தை எய்தச் செய்வதும் வறுமையே,

தரித்திர மிக்க வனப்பினை ஒடுக்கிச் சரீரத்தை உலர்தர வாட்டும்
தரித்திரம் அளவாச் சோம்பலை எழுப்பும் சாற்றருமுலோபத்தை
[மிடுக்கும்
தரித்திரம் தலைவன் தலைவியர்க்கிடையே தடுப்பருங்கலாம் பலவி
[ளைக்கும்
தரித்திர மவமானம் பொய்ப்பேராசை தருமிதிற் கொடிய தொன்றி
[லையே
(குசேலர் உபாக்யானம்)

மேற் கிளத்தப்பட்டன கொண்டு ஒரு நாட்டின் முன் னேற்றத்திற்குப் பெருந்தடையாய் நிற்பது வறுமையே எனக் கூறுதல் பிழையின் பாற்படாது.

நம் நாட்டின் வறுமைக்குக் காரணம்.

இந்தியாவைப்போல் நிரம்ப மக்களும் வறுமையும் சேர்ந்தாற்போல் குடிகொண்டுள்ள நாடு வேறு எதுவும் கிடையாது. இந்தியர்களாகிய நமக்கு வருவாய் குறைவு. குடும்பங்களில் நாளுக்கு நாள் பிரஜா விருத்தி அதிகமாகிக் கொண்டே வருகிறது. உதவாத செயல்களின் பொருட் டுத் தகாத செலவுகள் வேறு! (இராமதீர்த்தர்) இவற்று

டன் திண்ணை தூங்கிகளாகிய பல சோம்பேறிகள், தொழின் முறையிற் பற்றில்லாமை, பற்றுள்ளார் சிலர்க்கேனும் போதிய ஆதரவு அளிப்பாரின்மை வளங்கள் ஒன்றிய இயற்கைத்தாயின் கருவூலத்தை வேளாண்மையில் முற்பட்டு வெளிக்கொணராமை, இதுபோழ்து விளையும் சிறுவிளைவையும் பிறநாட்டார்க்குச் சிற்றாதியம் பெற்று வழங்கி அவர்தம் கைத்திறனால் பல்வேறு பண்டங்களாகச் செப்பம் செய்யப்பட்ட அவைகளையே பெருந்தொகைக்குப் பெறுவது, இன்னோரன்ன பிறவும் நம்நாட்டு வறுமைக்குக் காரணங்களாம்.

வறுமையை மடிக்க வழிகள்.

உள்நாட்டுத் தொழின் முறைகளை ஓங்கச் செய்து வருவாயை வளர்ப்பது, அடாத செலவை யகற்றி எளிய வாழ்வில் இலங்குவது, மடியர்களைத் திருத்த முயல்வது, புறநாட்டுப் பொருள்களைப் புறக்கணித்து அவற்றைப் போன்றவைகளை நம் நாட்டில் ஆக்குவது ஆதிய பன்முறைகளைக் கோடலால் நம் நாட்டு நல்குரவு வேருடன் ஒழியும் என்க வறுமை யொழிய நாடு உரிமை வாழ்வு உறுவதில் ஐயமின்றாம்.

பொருள் ஈட்டும்வழி.

பொருளீட்டுவதற்கு இரண்டே வழிகள் உள. ஒன்று வருவாயைப் பெருக்கிக் கொள்வது; மற்றொன்று செலவினங்களை வருவாய்க்குத்தகக் குறைத்தல் இவ்விரண்டில் முன்னது தொழின் முயற்சியாலும் அன்னியர்தம் உதவி மேலீட்டினாலும் இயலத்தக்கது. சிலர்க்கு வேலை செய்யத் திறனும் விருப்பு மிருக்கும் எனினும் அவரைப் பணிப்பார் இலரேல், அன்னவர் தொழின் முயற்சியிற் பயன் பெறுவது இன்மையாகும். இவ்விரண்டும் பொருந்தி யிருப்பினும் பயன் விரைவில் விளையாது. முயற்சி முற்றியபின் சிலகாலஞ் சென்ற பின்னரே ஊதியம் உறும் என்க. மேலும் ஒருவர் இம்முறையிற் றம்வருவாயைப் பெருக்கிக் கொள்ளினும் செலவு திட்டங்களைக் குறைத்துக் கொள்ள அறியா ரெனின் அவருக்கு மேன்மேலும் வருவாயிறந்த செலவு எற்படுமாக, அவர், தம் தொழின் முயற்சியினாற் பெற்ற பயன் இலதாவது காண்க.

எனவே, இரண்டாவதாகக் கூறப்பட்ட 'செலவினங்களை வருவாய்க்குத்தகக் குறைத்தல்' என்ற முறை எவர்க்கும் இன்றியமையாததும் விரைவிற் பயனளிப்பதும் ஒன்றாம்.

செட்டு இன்னதென்பது.

வருவாயிறந்த செலவை ஒல்லும் வரையிற் குறைத்து அதன் ஒரு பங்கை வருங்காலத்தே வைக்கெனச் சேமித்து வைத்துக் கொள்ளும் தன்மையே செட்டெனப் படும். செட்டென்பது அறிவின் திருமகள்; தன்னடக்கத்தின் சகோதரி; உரிமையின் அன்னை. ஒன்றையும் வீணாக்காது பயனற்ற செலவுகளை யொழித்து வாழ்தலே செட்டிலக்கணமாம். செட்டுவழி யொழுகும் வறியனையும், அஃதில்லாத செல்வனையும் காண்டலரிது. 'அரசாங்கத்திலாதல் குடும்பத்திலாதல் பணத்தைப் பெருக்கும் முறைகளிற் சிறந்தது செட்டு நலமே' என்று சிசரோ என்ற அறிஞர் கூறுகின்றனர். செட்டு சிக்கன மென்பன ஒரு பொருட் சொற்கள். முன்னையது வீட்டைப் பற்றியது; பின்னையது நாட்டைப் பற்றியது.

நம் நாட்டின் பண்டைய செட்டு முறை.

தந்தம் நாட்டிற் பண்டைய அறிஞர்கள் செட்டினைத் தமது வாழ்வில் நடாத்திக் காட்டினார்கள். ஒல்லும் வரை எளிமையைக் கைக் கொள்வதே அக்காலத்துச் செட்டு முறையாயமைந்திருந்தது. செந்தண்மையாளராம் அந்தணர்கள் அன்று, செவ்விய செட்டு நெறியில் எளிய வாழ்க்கையை மேற் கொண்டனர். அத்தகையார் துறவிகளும் ஆவர். அத்துறவியர் தம்துறவே செட்டு முறையின் உச்சியிற் பழுத்ததென்க. என்னை, ஒல்லும் வரை தேவையற்றவைகளை ஒதுக்குதல் அன்றோ செட்டு! இவ்வுலகவாழ்வில் உறுகணே விஞ்சுவதெனக் கண்டு இவை வேண்டாவென விடுத்த நன்னெறியாளர் துறவோ ரென்பது காண்க.

'வரம் ஒன்றிங் கெனக் கருளல் வேண்டும்.' அதுவே.

பெருங்குளிர்க் குடைந்த காலைக் கருந்துணி
பல தொடுத்திசைந்த ஒரு துணியல்லது
பிறி தொன் றுகிடையாதாக அருமனைக்
கடைப்புறத் திண்ணையல்லது கிடக்கைக்கு

பொருளீட்டல்

இடம்பிரிதில்லையாக கடும்பசிக்கு
உப்பின்றி அட்ட புற்கை யூணல்லது
மற்றென்று வாய்விட்டாற்றினும்
ஈகுநரில்லையாக நாள் நாளும்
ஒழுக்கம் நிறைந்த விழுப்பெருங் கேள்வி
மெய்த்தவர் குழாத்தொடும் வைக இத்திறம்
உடல் நீங்களவும் உதவிக் கடவுள் நின்
பெரும்பதமன்றி யான்பிரிதொன்று
இரந்தனன் வேண்டினும் ஈந்திடாததுவே.

என்று ஒரு பெரியார் வேண்டின செட்டினை (எளிய வாழ்வினை) துறவினை ஆய்ந்துணர்மின்.

பண்டைய அறிஞர்கள் இயற்கைவழி வாழ்வு நடாத்திய முறைகளை நன்காராயின் எத்துணை இன்பம் காண்கின்றோம்! யாவும் சிந்தை நிறைவிற பொலிந்ததாய செட்டு முறையே, எளிய வாழ்வேயாம் என்க. அந்தணர் இல் நிறுவுதல், இயற்கை மரங்களடியிற் கல்வி பயிற்றல், இருவேளை ஊண், அதிக உறக்கமின்மை, அளவிறந்து யாதினும் புகாமை, திங்களுக்கிருமுறை உண்ணு நோன்பு முதலிய ஒழுக்கங்கள் எல்லாம் இதுபோழ்து செட்டெனக் கூறப்படும் வாழ்வில் எளிமையின் மணங்கொண்டமைந்தது காண்க.

நம் நாட்டிற் செட்டுநெறியை வழிவழியே தழுவி வந்தவர் செட்டியார் என்ற பிரிவினர் ஆவர். அவர்களுள் பல வகுப்புகள் உண்டு. அன்னார் செட்டைப்பற்றி,

'கொள்ளு மொரு முதலுக்கு மோமவராதபடி
குறுகவே செலவு செய்வார்' என்றும்,

'கண்டெழுது பற்றுவரவினின் மயிர் பிளந்தே
கணக்கிலணுவாகிலுவிடார்' என்றும்,
காசு வீணிற் செலவிடார் உசிதமானவற்றில்
கனகதிரவியங்கள் விடுவார்' என்றும்,

ஆதாய மிஞ்சிச் செலவு செய்யார்யாவர்
வருகினும் கண்டபடி நேர்ந்துநிறைபோலுரைப்பார்.'

என்றும் சதகநூல்கள் சாற்றுகின்றன.

பணத்தையேயன்றிச் சொற்களைச் செலவிடுதலிலும் செட்டி மக்கள் மிகச் செட்டாகவே யிருப்பர்.

'சொல்லிலும் லாபங்கொள்ளும் வணிகர்'

என்றனர் பரஞ்சோதியாரும் (திருவிளையாடற் புராணம்).

'தம்பாலில்லது இலனெனின் இலனாய்
உள்ளது கூறி மாற்றியும் உள்ளது
சுட்டியும் உரைப்பர் சொற் சுருங்குதற்கே' (நன்னூல்)

என்ற சூத்திரம் வணிகர்தம் செட்டுமுறையைக் கிளர்த்தும்.

செட்டும் லோபமும்.

'சரி, ஐயா! செட்டாக இருக்க வருவாய்க்குத்தகச் செலவுகளைக் குறைத்துக் கொள்ளல் வேண்டும் என்கிறீரே! உண்பதை உண்டே தீரவேண்டும்; உடுப்பதை உடுத்தே தீரவேண்டும். அரை வயிறுண்டு பணத்தை மீப்பதா? (மீதம் பிடிப்பதா) பின்னே, எவ்வாறு செலவுதிட்டங்களைக் குறைத்துக் கொள்வது?'

எனக்கடாவுவாருமுளராவர். செட்டைக் கையாளுவதெனின் அரைவயிறுண்பதென்பதன்று. அப்படிப் பட்டினி கிடந்து பொருள் சேமிப்பது உலோபம் எனப்படும். தான் தேடிய பொருளைத் தானுமனுபவியாமல், பிறரும் துய்க்கவொட்டாமல் இருப்பான் 'உலோபி' எனப் படுவான். அவனது நிலை இரங்கத்தக்கதொன்றாம். பொருளாலாம் பயனை அவன் துய்க்காதுபோதலின் இம்மையிலும், இயன்றதைக் காத்தலின் மறுமையிலும் அவனுக்கு இன்பமின்றாம்.

'உண்ணான் ஒளிநிறான் ஓங்குபுகழ் செய்யான்
துன்னருங்கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள் காத்திருப்பானேல் அஆ
இழந்தானென்றெண்ணப்படும்.'

என்ற நாலடியின் பொருள் ஆய்தற்குரித்து. அதனால் உலோபம் வறுமையினும் இழிந்ததொன்றாம்.

பொருளீட்டல்

செட்டென்பதிதுவன்று. செட்டாகவிருப்பவன் தன் செல்வத்தைக் கொண்டு தானும் திருப்தியாகச் சாப்பிடுவான். அமயம் நேர்ந்துழி பிறர்க்கும் தக்காங்குதவுவன். செட்டுநெறியிற் சிறந்தவாற்ருன் இவ்வுலகம் செவ்வனே இயலுகிறது.

செட்டா யிருப்பாரைக் காணச் சிலர் விழைவதில்லை. அவரை இழிதகையோர், தன்னயம் பேணுவோர், கஞ்சத் தன முடையோர் என இழித்து நகையாடுவர் உண்மையில் செட்டில்லாதார். தாம் வண்மையுடையார் என்று நினைப் பினும், அவர்தமை டம்பாச்சாரிகள் என்றே நாம் வணக்க முடன் விளிப்போம். பயனற்ற பெருஞ் செலவினுல் வைப் பிலராகி உற்றுழி பிறர் நலத்திற் குதவியாற்ற வியலாராவா ரிவரன்றே ?

(தொடரும்)

ஒரு ஹோட்டலில் வந்து பிச்சை கேட்டதாக லூயிலேட்டூர் என்ற 50 வயது மனிதன் கைது செய்யப்பட்டான். அவனை போலீஸ் ஸ்டேஷனில் மேலோடு சோதித்ததில் கரன்ஸி நோட்டு களிலேயே அவன் மூழ்கியிருந்ததாகத் தெரிந்தது. அவனுடைய சட்டைகளின் உள்பாகங்களிலும் தொப்பியிலும் கரென்ஸி நோட்டு கள் வைத்துத் தைக்கப் பட்டிருந்தன. அவற்றில் எண்ணெய்ச் சிக்கு படிந்திருந்த போதிலும் எல்லா நோட்டுகளும் செல்லக் கூடிய வையே. அவனுடைய பெல்டை உதறியதில் 15000 பிராங்குக்கு நோட்டுகளும் 2000 பிராங்குக்குத் தங்க நாணயங்களும் அகப்பட் டன. இரவு வார்டர் பின்னர் உள்ளே எட்டிப் பார்த்தபோது லேட்டூர் கையில் ஒரு சிறிய பொட்டளத்தை வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தான். உள்ளே சென்று பார்த்ததில் பத்து பிராங்கு நோட்டுகளை ஒரு கட்டாகக் கட்டி அவன் வைத்துக் கொண்டிருக்கி ருன். லேட்டூரை எல்லாத் துணிகளையும் களையுமாறு கூறிச் சோதித்ததில் இன்னும் 2000 பிராங்குக்கு நோட்டுகள் உள் சட்டை யின் இடுப்புப் பையிலிருந்தும், கால் பூட்ஸ்களிலிருந்தும் அத்தனை பணமும் அகப்பட்டன. இவ்வளவு பணம் ஏதென்று கேட்டதற்கு 30 வருஷங்களாகக் கஷ்டப்பட்டு வேலை செய்து சிக்கனமாக வாழ்ந்ததால் மிச்சப்பட்ட பணமென்று பதில் கூறினன்.

நட்டாஜி

அல்லது

சிவாஜியின் சேனைத்தலைவன்

(ஸ்ரீமான் மயிலை சீனி. வேங்கடசாமி எழுதியது.)

6-வது அத்தியாயம்.

ஆயூப்கான் சிறைப்படுதல்

யோகாநந்தசுவாமிகளுக்குச் செய்யவேண்டிய இறுதிக்கடன்களை யெல்லாம் நட்டாஜி மிக்க அன்புடன் செய்து முடித்தான். இப்போது, அவன் செய்யவேண்டியது சுவாமிகள், கடைசிகாலத்தில் தனக்கிட்ட கட்டளைகளைச் செய்து முடிக்கவேண்டிய தொன்றே. மகாராஷ்டிர தேசத்தில் நடைபெறப்போகிற சுதந்தரப் போரில் நட்டாஜியும் துணை செய்யவேண்டுமென்று சுவாமிகள் அவனுக்குக் கட்டளையிட்டிருந்தாரல்லவா? அவனும், தேசிய கட்சியில் சேர்ந்து நாட்டின் விடுதலைக்காகப் போராட சமயம் பார்த்துக்கொண்டிருப்பதையும் நாம் அறிவோமன்றோ? ஆகவே அவன் சுதந்தரப் போரைத் தொடங்குதற்கு உறுதி செய்துகொண்டான். நாட்டின் விடுதலைக்காகத் தன் உயிரைக்கொடுக்க முடிவு செய்துகொண்டான். ஆனால், முதலில் சௌக்கிராமம் சென்று தன் பெற்றோரைப் பார்க்கவேண்டும் என்னும் ஆசை அவனுக்குண்டாயிற்று.

நட்டாஜி, தன் மெய்யுருவத்துடன் ஊருக்கு எப்படிப்போகக் கூடும்? அவன் சேனைத்தலைவனைக் கொலை செய்தவனல்லவா? அவனைப்பிடித்துக் கொடுப்பவருக்குப் பெருந்தொகை பரிசளிப்பதாக அரசாங்கத்தார் நாடெங்கும் விளம்பரம் செய்திருக்கிறார்கள். ஆகையால், தான் மலையை விட்டு அப்புறஞ் சென்றால் கட்டாயமாக ஆபத்துக்குட்பட நேரிடுமென்று அறிந்தான். கடைசியாக மாறுவேடம் பூண்டு சௌக்கிராமம் செல்வதென்று துணிந்தான். உடம்பு முழுவதும் விபூதி பூசி அரையில் காவித்துணியுடுத்து முதுகில் புலித்தோலைப் போர்த்து கையில் ஒரு திரு ஓடு எடுத்துக் கொண்டு ஒரு "பைராகி" வேடத்தோடு அவன் புலிக்குகையை விட்டு வெளி வந்தான். இந்த வேடத்தில் அவனைப் பார்ப்போர்

தமிழ்நாடு ஆவணக் காப்ப
10374
600 008

அவனை இன்னானென்றறிந்துகொள்வது கடினமாயிருந்தது. அவன் மலையுச்சியிலிருந்து இறங்கி அடிவாரத்தை யடைந்தான். அப்போது, அவ்வழகான மலையை விட்டுப் பிரிவது அவனுக்குச் சற்று வருத்தமாக யிருந்தது. அவன் மலையைப்பார்த்து "போயவருகிறேன. உனக்குக்கடைசி வந்தனம்'' என்றுசொல்லி சௌக்கிராமம் நோக்கி நடந்தான். கிராமத்தை யடைந்த போது இராக்காலமாய் விட்டது. ஜனங்கள் நடமாட்டம் அடங்கிவிட்டது. அவன் தன்னை யொருவரும் சந்தேகிக்காவண்ணம் வீடுவீடாகச் சென்று பிச்சை கேட்டுக்கொண்டே சென்றான். அவனைப்பார்த்தவர்களில் ஒருவராவது அவனை இன்னானென்று அறிந்துகொள்ளவில்லை. கடைசியாகத் தன் பெற்றோர் வசிக்கும் வீட்டுக்குச் சென்று பிச்சை கேட்டான். அவ்வீட்டு வேலையாளாகிய 'யசாஜி' வெளியில் வந்து பிச்சை கொடுத்தான். நட்டாஜி அவனைப் யார்த்து "இன்று இரவு தங்குவதற்கு இடங்கொடுக்க முடியுமா?" என்று வினவினான். அதற்கு யசாஜி உடன்பட்டு, வீட்டுக்கு அருகில் உள்ள மாமரத்தடியில் இருந்த ஒரு குடிசையைக் காட்டி "அவ்விடத்தில் தங்கிக் கொள்ளலாம்'' என்று சொல்லிவிட்டு வீட்டிற்குள் போய்விட்டான். அவன் உள்ளே போனதும், அவன்கூடத் தன்னை யறிந்து கொள்ளாததை யறிந்து நட்டாஜி தனக்குள் நகைத்துக்கொண்டே மாமரத்தடியிலிருந்த குடிசைக்குள் போய் உட்கார்ந்தான்.

அந்தக் குடிசை நட்டாஜியின் தகப்பனால் வழிப்போக்கரான சாதுக்கள் தங்குவதற்கென்று கட்டப்பட்டு நெடுநாளாக இருந்து வருகிறது. சந்நியாசி முதலிய சாதுக்கள் அக்கிராமத்தில் வந்தால் அக்குடிசையில்தான் தங்குவது வழக்கம். அவர்களுக்கு வேண்டிய வசதிகளை யெல்லாம் நட்டாஜியின் தகப்பனாரே செய்து உதவுவார். அவ்வழக்கப்படியே அவர், யாரோ ஒரு சாது வந்திருக்கிறார் என்று யாசாஜியினால் அறிந்து அவருக்கு உபசாரம் செய்ய அக்குடிசைக்கு வந்தார். அச்சமயம் வேடத்தோடிருக்கும் நட்டாஜியைத் தவிர அங்கு ஒருவரும் இல்லை. தன் தந்தை யங்கு வநததை யறிந்த நட்டாஜி, தான் இன்னானென்று அவருக்குச் சொல்லி அவர் பாதங்களில் விழுந்து வணங்கினான். தன் மகனைத் திடீரென்று சந்தித்ததும் தந்தைக்குண்டான ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அவர் தன் மகனைத் தூக்கித் தழுவி மகிழ்ந்தார். அச்சமயத்தில் அவன் தாயாரும் அவ்விடம் வந்து தன் மகன் சந்நியாசி வேஷத்துடன்

இருப்பதைக்கண்டு ஆச்சரியமும் அவனைக்காண நேர்ந்ததற்காக சந்தோஷமும் அடைந்தாள். நெடுநாட்கள் சென்று திடீரென்று சந்தித்த பெற்றோருக்கும் பிள்ளைக்கும் உண்டான சந்தோஷம் தணிவதற்குச் சற்று நேரம் சென்றது. பிறகு அவர்கள் அவனைத் தமது வீட்டுக்கழைத்துக் கொண்டுபோய் உணவளித்துப் பற்பல விஷயங்களைப்பற்றி அன்றிரவு நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

நட்டாஜி, தான் சௌக்கிராமததை விட்டுச் சென்றது முதல் யோகானந்தசுவாமிகள் புலியினல் அடியுண்டிறந்தது வரையில் தன் வரலாற்றைத் தன் பெற்றோருக்குச் சொன்னான். பிறகு அவன், தன் சகோதரி கங்காபாயைப்பற்றி ஆவலோடு விசாரித்தான். அவளை எங்கும் தேடிப்பார்த்ததாகவும் எவ்விடத்திலும் அவள் காணப்படவில்லை யென்றும் அவளைப்பற்றி யாதொரு செய்தியும் இதுவரையில் தெரியாதபடியால் அவள் இறந்துவிட்டாவதிருக்கவேண்டும் அல்லது முகம்மதியர் கையில் அகப்பட்டுக்கொண்டிருக்கவேண்டும் என்று முடிவு செய்து கொண்டதாகவும் மிக்க மனவருத்தத்துடன் அவன் பெற்றோர் அழுதுகொண்டே சொன்னார்கள். அதைக் கேட்டதும் அவனுக்கு ஆத்திரமும் பீஜப்பூர் அரசாட்சியில் துவேஷமும் உண்டாயின. அவன் பீஜப்பூர் அரசாட்சியை வேருடன் தொலைக்கவேண்டுமென்று தனக்குள் வஞ்சினம் செய்துகொண்டான். பிறகு அவன் தன் மாமன் தாதாஜியைப் பற்றியும் அவர் மகள் காசிபாயைப் பற்றியும் விசாரித்தான். அவர்கள் அவ்வூரில் இல்லை என்றும், சுதந்தரக்கக்ஷியின் தலைவராகிய சிவாஜிக்குத் தாதாஜி இரகசியமாய் உதவி செய்துவருவதை அரசாங்கத்தார் அறிந்து அவரைச் சிறைப்பிடித்து வரும்படி உத்தியோகஸ்தர்களையும் சிப்பாய்களையும் அனுப்பினர்களென்றும், இதை அவர் எப்படியோ தெரிந்துகொண்டு தன் மகள் காசிபாயுடன் சிவாஜியின் இராஜமாட்சிக் கோட்டைக்கு ஓடிப்போய்விட்டாரென்றும், இராஜமாட்சிக் கோட்டை மலைமேல் கட்டப்பட்டு மிகுந்த பலமுடையதாகவிருப்பதால் எதிரிகள் அதற்குள் போக முடியாதென்றும் அவன் தகப்பனர் நட்டாஜிக்குச் சொன்னர்.

இன்னும், நட்டாஜி தன் தந்தையினிடமிருந்து அரசியல் சம்பந்தமான பல விஷயங்களை அறிந்துகொண்டான். சுதந்தரக் கட்சிக்குச் சிவாஜி என்னும் வீரன் தலைவனக விருக்கிறதாயும், அவ் வீரன் பகிரங்கமாக பீஜப்பூர் அரசனுடன் எதிர்த்துப்போர் செய்து

வருகிருரென்றும், அவர் இதுவரையில் பூனுவிற்குத் தெற்கிலுள்ள தோரணு, ராஜ்காட், சிங்காட், புராந்தர், இராஜமாட்சி முதலிய மலைக் கோட்டைகளைப் பிடித்திருக்கிருர் என்றும், அவர் மகாராட்டிர தேசத்தின் விடுதலைக்காகவும் சுதந்தரத்துக்காகவும் போராடுகிறபடியால் தோட்டி முதல் தொண்டைமான் வரையில் எல்லா ஜனங்களும் அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகிருர்களென்றும் தன் தகப்பனுர் சொன்னதைக்கேட்டு நட்டாஜி மிகுந்த உற்சாகமும் உவகையும் அடைந்தான்.

பிறகு அவன், தன் தந்தையை நோக்கி "ஆனல் பீஜப்பூர் அரசன் சிவாஜி பிடித்த கோட்டைகளைத் திரும்பிப் பிடித்துக் கொள்ள முயற்சி செய்யவில்லையோ" என்று வினவினன்.

"ஆம்! இப்போதுதான், பீஜப்பூர் அரசன் கோட்டைகளைப் பிடிப்பதற்காக ஒரு பெருஞ் சேனையை யனுப்பியிருக்கிருன். அந்த சேனை இராஜமாட்சிக் கோட்டையைத் தாக்கி அதைக் கைப்பற்றிக் கொள்வதற்காக வந்துகொண்டிருக்கிறதென்று ஜனங்கள் பேசிக் கொள்ளுகிருர்கள்" என்று அவன் தகப்பனுர் விடையளித்தார்.

இதைக்கேட்டதும் நட்டாஜி திடுக்கிட்டான். அவன் மனதில் பல யோசனைகள் தோன்றின. "சுதந்தரக்கட்சிக்காக சிவாஜி ஜெயித்த கோட்டைகளை மறுபடியும் முகம்மதியர் பிடித்துக்கொள்வதா? ஓ! அது ஒருபோதும் முடியாது. உடனே நான் அக்கோட்டைக்குச் சென்று என்னுலான உதவியைச் செய்யவேண்டும். இதுவுமன்றி காசிபாயும் தாதாஜியும் அவ்விடத்தில் இருக்கிருர்கள். சண்டை நடக்கும்போது அவர்கள் அங்கிருப்பது ஆபத்தாகும். இச்செய்தியை அவர்களுக்குத் தெரிவித்து உடனே அவர்களை வேறு இடத்திற்கு அனுப்பிவிடுவது என்னுடைய முதல்கடமை" என்று அவன் தன்க்குள் யோசித்தான். பிறகு அவன் தன் பெற்ருேரைப் பார்த்து "அப்பா! நாளைக்கே நான் இராஜ மாட்சிக் கோட்டைக்குப் போகவேண்டும். பீஜப்பூர் சேனை, அக்கோட்டையை முற்றுகை போடுவதற்கு முன் நான் அங்கு சென்று தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். யோகாநந்தசுவாமிகளும், நான் சுதந்தரப் போரில் ஊழியம் செய்ய வேண்டுமென்று எனக்குக் கட்டளையிட்டிருக்கிருர். அம்மா! இப்பொழுதே உத்தரவு கொடுங்கள். விடியற் காலத்தில் நான் புறப்பட்டுப் போகிறேன்"

என்று பேசினான். அவன் பேசியதிலிருந்து அவனை ஒருவரும் தடுக்க முடியாதென்று தோன்றியது.

அவன் பெற்றோர் இதைக் கேட்டதும் திடுக்கிட்டார்கள். அவ்வளவு சடுதியில் அவன் தங்களை விட்டுப் பிரிவான் என்று அவர்கள் ஒரு சிறிதும் எதிர் பார்க்கவில்லை. அரசாங்கத்தின் கோபத்திற்காளாகி, இரண்டு வருஷங்களாகப் பிரிந்திருந்த தமது ஒரேபிள்ளை திடீரென்று தோன்றி உடனே பிரிந்துவிடுவது அப்பெற்றோருக்கு மிகுந்த மனவருத்தமாகவேயிருந்தது. ஆனால் அவன் போகும் காரியமோ தேசவூழியம் செய்வதற்காக. அதுவும் தேசீயக் கட்சியின் சார்பாக அன்னியனாகிய ஒரு கொடுங்கோலரசனுடன் சண்டை செய்யப் போகிறான். அப்படிச் செல்லும் பிள்ளைகளைத் தேசாபிமானமுள்ள எந்த பெற்றோராவது தடை செய்வார்களா? அதிலும், தேசாபிமான மிக்க மகாராட்டிர தேசத்துப் பெற்றோர்கள், கண்மணி போன்ற தங்கள் பிள்ளைகளை இழந்தாகிலும் தேசத்தின் சுதந்தரத்தைக் காப்பாற்றுவார்களன்றோ? ஆகவே, நட்டாஜி விரும்பிய படியே அவன் பெற்றோர் அனுமதி கொடுத்தார்கள். அப்போது இரவு நெடுநேரமாய் விட்டபடியால் எல்லோரும் படுக்கைக்குச் சென்றார்கள்.

மறுநாள், விடியற்காலத்தில் நட்டாஜி விழித்தெழுந்தான். ஒருவர் கண்ணிலும் படாமல் கிராமத்தை விட்டுப் போக வேண்டும் என்பது அவன் எண்ணம். ஆகையால், அவன் தன் பெற்றோரை வணங்கி விடை பெற்றுக்கொண்டு சந்நியாசி வேடத்துடன் வெளிப்பட்டான். அவன் கையில் ஒரு நீண்ட ஈட்டி பிடித்திருந்தான். ஒரு கூர்மையான வாளைத் தன் புலித்தோலில் மறைத்து வைத்திருந்தான். இக்காலத்தில் ஒரு சந்நியாசியினிடம் ஈட்டியும் வாளும் காணப்பட்டால் ஜனங்கள் அவரைச் சந்தேகிப்பார்களன்றோ? ஆனால் அக்காலத்தில் சந்நியாசிகள்கூட தமது தற்காப்புக்காக ஆயுதங்களை வைத்திருப்பது வழக்கமாக விருந்தது. ஏனென்றால், அக்காலத்தில் திருடர்களும் வழிபறிப்போரும் காடடர்ந்த இடங்களில் துஷ்ட மிருகங்களும் தலைகாட்டித்திரிந்து வந்தபடியால் சந்நியாசிகள் உட்பட ஒவ்வொருவரும் ஆயுதங்களோடு பிரயாணம் செய்வது வழக்கம். ஆகவே நட்டாஜியினிடம் போர்க்கருவிகள் இருப்பதைக் கண்டு ஒருவரும் அவனைச் சந்தேகிக்கக் காரணமில்லை. ஆகவே இவ்வித கோலத்தோடு நட்டாஜி சௌக்கிராமத்தை விட்டு இராஜ

மாட்சிக் கோட்டை நோக்கி நடந்தான். அன்று முழுவதும் நெடுந் தூரம் பெரும்பாதை வழியே சென்றான். அவன் சென்ற பாதை கபோலி (Khapoli) கண்டாலா (Khandala) என்னும கிராமங்க ளின் வழியாய் மேற்குத்தொடர்ச்சிமலைகளின்பக்கமாய்ச் சென் றது. (கண்டாலா என்னும் கிராமத்தருகில்தான் இப்போதைய ரெயில்பாதை (The Great Indian Peninsula Railway) மேற்குத் தொடர்ச்சிமலைமேல் ஏறி தக்ஷணபீடபூமிக்குச் செல்கிறது). நட் டாஜி கண்டாலா கிராமத்தைக் கடந்து மலைச்சாரலை யடைந்தான். அப்போது மாலைப்பொழுதாய்விட்டபடியால் சூரியன் மேற்கில் சென்றான்.

அச்சமயம், மலையுச்சியில், சிப்பாயுடையணிந்த ஒரு வீரன் ஒரு குதிரையின்மேல் கம்பீரமாயமர்ந்து கீழே பார்த்தவண்ண மிருந்தான். அவன் அணிந்திருக்கும் சிப்பாய் உடைகளும் அவன் ஏறியிருந்த குதிரையும் அவன் ஒரு சேனைத்தலைவன் என்பதைக் காட்டின. அவனுடைய கருத்த தாடி முகம்மதியன் என்பதைத் தெரிவித்தது. அவன் முகத்தோற்றம் அவன் ஒரு பெரிய குடும் பத்தைச் சேர்ந்தவன் என்பதைக் காட்டிற்று. சூரிய வெளிச்சத் தில் அவனுடைய கவசங்களும் வாளும் பளிச்சென்று தோன்றின. அவ்வீரன் சற்று தூரத்தில் நட்டாஜி வருவதைக் கண்டான். அவனை, உண்மையிலேயே ஒரு சந்நியாசி என்று நினைத்து அவ்வீ ரன் "அடே! இந்துசந்நியாசிப்பயலே! இங்கே வா, நான் கேட் கும் கேள்விக்கு உடனே பதில் சொல். சொல்லாவிட்டால், சாம் பல் பூசப்பட்ட உன் தோலை உரித்துவிடுவேன்" என்று அதிகார தோரணையோடு அலட்சியமாகப் பேசினான்.

நட்டாஜிக்குக் கோபம் வந்தது. ஆனால் அதை வெளிக்காட் டாமல் அடக்கிக்கொண்டு, கம்பீரமாக நிமிர்ந்து நடந்து அருகில் சென்று, குதிரையின் கடிவாளத்தின் மேல் கையை வைதது குதி ரைமேல் இருக்கும் வீரனை முறைத்துப் பார்த்தான்.

குதிரைவீரன் இதை எதிர்பார்க்கவில்லை. தன்னை வணங்கிக் கும்பிட்டு அடங்கி ஒடுங்கி மரியாதையாகப் பதில் சொல்லுவான் என்ற அவ்வீரன் எண்ணியிருந்தான். அதற்கு மாறாக, நட்டாஜி அவனை மதிக்காமல் நிமிர்ந்து நடப்பதைக்கண்டதும் அவன் திடுக்கிட்டான். ஆனால், அதிகாரத்துடன் படாடோபமாகப்பேசி

அவனைக் கீழ்ப்படியச் செய்ய எண்ணங்கொண்டு, நட்டாஜியைப் பார்த்து, "அடே பெட்டைக் கழுதையின் பிள்ளையே! சீக்கிரம் சொல். இராஜமாட்சிக் கோட்டைக்கு எந்த வழியாகச் செல்ல வேண்டும்? அயூப்கானாகிய நான் என் சிப்பாய்களைக் கூட்டிக் கொண்டு போய் அக்கோட்டையிலிருக்கும் பயல்களை யெல்லாம் துரத்தியடிக்கப் போகிறேன். உண்மையைப் பேசு. இல்லாவிட்டால், இதோ பார்த்தாயா, "அபுஜான்" என்னும் இக்குதிரையை? இதை உன்மேல் ஏவி உன்னை மிதித்துக்கொல்லச் செய்வேன்." என்று அதிகாரத்துடன் ஆடம்பரமாகப்பேசினான்.

நட்டாஜிக்குச்சினம் மூக்கின்மேல் வந்துவிட்டது. தன்னை அவமதித்துப் பேசிய அவ்வீரனை நன்றாகப் புடைத்துப் புத்தி கற்பிக்கவேண்டும் என்று தீர்மானித்தான். ஆகவே அவன் அவ்வீரனைப் பார்த்து "ஓய்! நீ படாடோபமாகப் பேசினால் நான் பயந்துவிட மாட்டேன். நீ இராஜமாட்சிக் கோட்டையைப்பிடித்துக்கொள்ளப் போவதாகச் சொன்னாயல்லவா? இருக்கட்டும் நீ அந்தக்கோட்டையைப்பிடித்து அதில் உன் கொடியை நாட்டுவதற்குமுன் சற்று உன் கைத்திறத்தை என்னிடம் காட்டு பார்ப்போம். கீழே இறங்கி உன் வாளை உறையிலிருந்து எடுத்துக்கொள். கடவுள் நம்மிருவரில் யாருக்கு வெற்றி யளிக்கிறார் என்பதை யறிந்துகொள்வோம்." என்று அவனைத்தன்னுடன் சண்டை செய்ய அழைத்தான்.

இதைக் கேட்டதும் "அயூப்கான்" என்னும் அவ்வீரனுக்குச் சுறுக்கென்று தைத்தது. இவ்விதம் தன்னை சண்டைக்கு அழைப்பானென்று அவன் கனவிலும் கருதவில்லை. ஆழந்தெரியாமல் காலை விட்டுக்கொண்டோமே என்று சிந்தித்து, கடைசியாக அவனிடம் ஒன்றும் பேசாமல் போய்விடுவதே மரியாதை என்று எண்ணி அயூப்கான் திடீரென்று குதிரையைத்தட்டி ஓட்டினான். ஆனால் முன் ஜாக்கிரதையுடன் நட்டாஜி கடிவாளத்தைப் பலமாகப் பிடித்திருந்தபடியால் குதிரை ஓடமுடியாமல் இடறுபட்டு கால்களைத் தூக்கி முன்னும் பின்னும் ஆடி கடிவாளத்தை இழுத்துக்கொண்டு ஓடவே குதிரைமேலிருந்த அயூப்கான் கீழே விழுந்துவிட்டான். இதனால், ஆத்திரமும் கோபமும் அடைந்த அயூப்கான், பாவம்! தனது கொழுத்த தேகத்தைத் தூக்கிக்கொண்டு எழுந்து நிற்கக் கஷ்டப்படுவதைக் கண்டு நட்டாஜி, அருகில் சென்று அவனைத் தூக்கி நிறுத்தினான். அயூப்கான், தன்வலதுகையைத்தொங்க

விட்டுக் கொண்டு மரியாதையோடு தாழ்ந்த குரலில் " அப்பா சந்நியாசி ! என் கையில் பலமாகக் காயம்பட்டு விட்டது. கையைத் தூக்க முடியவில்லை. நான் உன்னுடன் எப்படி சண்டை செய்வது ?" என்று பேசினன்.

அவன் சொல்லியதை நம்புவதற்கு நட்டாஜி முட்டாளல்ல. உண்மையில் அவனுக்கு அதிகமாகக் காயம் ஒன்றும் ஏற்படவில்லை. ஆகையால் நட்டாஜி ஆயூப்கானிடமிருந்த வாளை எடுத்துக் கொண்டு "நல்லது, இருக்கட்டும், சற்று முன்னல் இராஜமாட்சிக் கோட்டைக்கு வழிகாட்டச் சொன்னயே, இப்பொழுது என்னுடன் வா. நாமிருவரும் அங்கே போகலாம். ஏதாவது தடை சொன்னல் உன் உயிர் உன்னுடையதல்ல என்று அறிந்து கொள். பத்திரம்" என்ருன்.

இப்பொழுது அவ்வீரன் தன் நிலைமையைக் கண்டு வருத்தமடைந்தான். தான் ஒரு சிறையாளியாக இருப்பதைக் கண்டு ஏங்கினன். அவன் நல்ல வார்த்தைகள் பேசி, தான் அதிக பணம் கொடுப்பதாகவும் தன்னை விட்டு விடவேண்டும் என்றும் கெஞ்சினன். உண்மைத் தேசாபிமானியாகிய நட்டாஜியா இதற்கு இசைவான் ? " நீ எனக்கு லஞ்சம் கொடுப்பதைப் பற்றியும் அதை நான் பெற்றுக்கொள்வதைப் பற்றியும் கோட்டைக்குச் சென்றபின் பேசிக் கொள்ளலாம். இப்பொழுது ஒன்றும் பேசாதே. என்னுடன் வா " என்று அதிகாரத்தோடு சொன்னன் நட்டாஜி.

இச்சமயத்தில் யாரோ ஒருவன் ஓடிப்போன " அபுஜான் " என்னும் குதிரையைப் பிடித்துக்கொண்டு அவ்விடம் வந்தான். அவன் இருபது வயதுடைய சுறுசுறுப்புள்ள வாலிபன். அவன் உடுத்திருந்த உடையினுல் அவன் மராட்டியன் என்று தெரிகிறது. அவன் முகமும் கண்களும் அவன் களங்கமற்றவன் என்பதையும் அறிவாளி என்பதையும் விளக்கின. அவன் அருகில் வந்ததும் நட்டாஜி " நீ யார் ? உன் பெயர் என்ன ?" என்று கேட்டான்.

அவன் மிகுந்த வணக்கத்துடன் "சுவாமீ! நான் அடுத்த கிராமத்தில் வசிக்கும் குடியானவன். என் பெயர் இராமன். இந்த குதிரை மிரண்டு ஓடிவருதை வழியில் கண்டு இதைப் பிடித்து வருகிறேன். இது இந்த சிப்பாய்க்குச் சொந்தமாக விருக்கும் என்று நினைக்கிறேன் " என்று விடையளித்தான்.

"நல்லது. நீ நல்ல வேளையில் வந்து சேர்ந்தாய்; நல்லவனாகவும் காணப்படுகிறாய். நாங்கள் இராஜமாட்சிக்கோட்டைக்குப் போகவேண்டும். நீ இங்கே வசிக்கிறவனாகையால் உனக்குக்கிளை வழிகள் நன்றாகத் தெரிந்திருக்கும். எங்களை அங்கே அழைத்துக் கொண்டுபோக முடியுமா?"

"ஓ, எனக்கு நன்றாகத் தெரியும். சாலை வழியாகப் போவது தான் சௌகரியம். மலைமேல் ஒற்றையடிப்பாதையாகச் செல்வது கஷ்டமாக விருக்கும். ஏனென்றால் இந்த மலையிலிருந்து இறங்கி இன்னொருமலையில் ஏறிப்போக வேண்டும். நம்முடன் குதிரையும் இருப்பதால் அதையும் கூட்டிக் கொண்டு இரண்டாயிரம் அடி இறங்கி இரண்டாயிரம் அடி ஏறுவது என்றால் கடினம்தானே? ஆகையால் சாலையின் வழியே சுகமாகப் போகலாம்" என்று இராமன் பதில் சொன்னான்.

"ஓ! வேண்டாம்; வேண்டாம். சாலை வழியாகச் சென்றால் உனக்கும் எனக்கும் ஆபத்தாக முடியும். காரணமென்னவென்றால்,—இதோ நிற்கிறாரே இவர்தான் அயூப்கான் என்பவர். இவர் ஒரு பெரிய சேனையைக் கூட்டிக்கொண்டு இராஜமாட்சிக் கோட்டையைப் பிடிக்க வந்திருக்கிறார். இப்போது இவருடைய சேனை, சாலைக்கருகில் ஒரு தோட்டத்தில் தங்கியிருக்கிறது. இவர் தன்னுடைய வாய்க்கொழுப்பினால் என்னிடம் கைதியாக நேரிட்டது. ஆகையால், இவரை அழைத்துக்கொண்டு சாலைவழியாகப் போவது ஆபத்து; ஒருவர் கண்ணிலும் படாமல் கஷ்டத்தோடு காட்டுவழியாகக் கோட்டைக்குப் போவதுதான் நன்மை" என்று நட்டாஜி இராமனுக்குச் சொன்னான்.

இராமன் சுதந்தரக்கட்சியைச் சேர்ந்தவன். ஆகையால், அயூப்கான் கைதியானதைப்பற்றி சந்தோஷப்பட்டான். அவனுக்கு நட்டாஜி சொன்ன யோசனை சரியானதென்று தோன்றியபடியால் அவன் காட்டின் வழியே கோட்டைக்கு அழைத்துக்கொண்டு போகச் சம்மதித்தான். ஆனால், குதிரையை அனாவசியமாகத்தங்களுடன் கூட்டிக்கொண்டு போவதில் பயனில்லை என்றும் சற்று தூரத்தில் வசிக்கும் தன் நண்பனாகிய ஒரு குடியானவனிடம் அதை ஒப்புவித்தால் அவன் அதை பத்திரமாகக் காப்பாற்றிக் கொடுப்பானென்றும் யோசனை சொல்ல நட்டாஜி அதற்குச் சம்மதித்தான். அதன்படியே குதிரை இராமனுக்கு நண்பனாகிய குடியானவனிடம் ஒப்புவிக்

கப்பட்டது. பிறகு நட்டாஜியும் இராமனும் கைதியாகிய அயூப் கானை நடத்திக்கொண்டு காட்டின் வழியாக நடந்தார்கள். இராமன் வழிகாட்டிக்கொண்டு முன்னே நடந்தான். அவனுக்குப் பின்னே அயூப்கான் வருத்தத்தோடு தலை கவிழ்ந்தவண்ணம் நடந்தான். அவன் பிறகு நட்டாஜி, அவன் மேல் கண்ணோட்டம் வைத்து அவன் தப்பி ஓடாதபடி பார்த்துக்கொண்டு கவனமாக நடந்தான். அயூப்கானும், தனது கொழுத்த தேகம் இடங்கொடாதபடியால், தப்பி ஓட முயற்சி செய்யவில்லை. அன்றியும் அவன் குதிரைமீது சஞ்சரித்துப் பழக்கப்பட்டவன் ; அதிகமாக நடந்து பழக்கப்பட்டவனல்ல. இதனால், கரடுமுரடான காட்டுவழியில் மலை மேல் ஏறுவதும இறங்குவதும் அவனுக்குக் கஷ்டமாக விருந்தது. அச்சமயங்களில் அவன் சற்றுத் தயங்கினான். ஆனால், நட்டாஜியின் கூர்மையான ஈட்டி முனை அவனை வழிநடத்திக்கொண்டு சென்றது. கடைசியாக அவர்கள் கோட்டைவாயிலை யடைந்த போது இருட்டாய்விட்டது.

(தொடரும்)

துருக்கியில் ஆரம்பக்கல்வி இலவசமாகக் கற்பிக்கப்படுகிறதாம்.

***

பல்கேரியாவில் 1924 பாடசாலைகள் இருந்து வருகின்றனவாம்.

***

ஜெர்மனி 1674 லட்சம் மார்க்குகள் செலவு செய்து கப்பல் படை தயார் செய்யப் போகிறதாம்.

***

க்யூபெக்கிலுள்ள ஒரு கட்டிடம் தீப்பற்றி எரிந்ததால் சுமார் 50 பேர்களுக்குமேல் தீக்கிரையாயினர் என ஒரு செய்தி கூறுகிறது.

***

ராயல் கமிஷன் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு ஜனவரி மாதம் 19-ந்தேதி புறப்படப்போவதாக ஒரு செய்தி எட்டுகிறது.

***

இங்கிலாந்தில் ஒரு பிரபுவும் அவர் மனைவியுமாய் 23 மணி 15 நிமிஷங்களில் 15000 மைல் ஒரு மோட்டாரை ஓட்டியிருக்கிறார்களாம்.

கண்ணப்பநாயனர் சரிதை

வண்ணைநகர் ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை எழுதியது.

கலி வெண்பா.

(190-ம் பக்க முற் தொடர்ச்சி)

காவுசெறி பொன்முதலி யாற்றின் கரைபுகுத
ஏவுசெறி காடனெதிர் சென்று—கோவேகேள்
தீகடைந்து வைத்தேன் றிகழ்வரா கத்துறுப்பு
யாவையு நீர் நோக்கு மெனநவின்று—தேவரீர்
இத்துணைக்கா வந்தாழ்த்த தென்னையென நாணன் கேட்
அத்திரியிற் றேவர்தமைக் கண்டணைத்து—ஒத்தபொங்தை
விட்டகலா வல்லுடும்பு போல விமலருக்கு
அட்ட இறைச்சி யருத்தவந்தார்—திட்டமதாய்
நங்கள் குலக்கிழமை நீத்தாரந் நம்பனுக்கு
இங்கிதமார் நற்றொழும்பா யெய்தினரால்—இங்கிவரின்
றன்மையிது வாகுமெனச் சாற்றினன் காடனுன்னி
என்ன செய்தாய் திண்ணநீ யெங்களுக்கு—மன்னைப்
போந்தா யலேயோ வெனப்புகல நோக்காராய்
எய்ந்தபன்றி தன்னை யெரியிலிட்டுத்—தீய்ந்திடவே
நன்றாய் வதக்கி நலனுறவே யம்பதனற்
றுன்ற வகிர்ந்து தொகுத்ததனை—வென்றியுள
கூறியதோர் பாணத்திற் கோததனவிற் காச்சியபின்
ஏரார் சுவையறிய வாயிலிட்டு—நேராகப்
பல்லா லதுக்கிப் பதம்பார்த்து நல்லவெலாம்
கல்லைதனிற் பெய்வதனைக் காடனொடு—வில்லிலகு
நாணனுங்கண் டிந்த நட்புகளை யிக்குமரன்
பூணு மயலிற் பொருந்தினன்—நாணமின்றித்
தூய இறைச்சி தனையதுக்கித் துப்பிகிறன்
காயும் பசியாற் களைப்படைந்தும்—மேயவன்பால்
உண்ணு னெமக்கு முதவா னிவன்மயலை
நண்ணு தகற்றவழி நாமறியோம்—எண்ணமிக்க
நாகனொடு தேவ ராட்டியையு நாங்கொணர்ந்து
போக வுபாயம் புரிகுவோம்—வேகமொடு

போதுவோ மென்று புறப்பட்டார் தம்மையிவர்
ஏதுமறி யாதிறைச்சிக் கல்லைகொண்டு—தீதணுகா
மாதமரும் பங்கருக்கு மஞ்சன மாட்டக் கருதி
சீத நதி நீரவாய் சேர்த்திட்டு—ஆதரமாய்
தாதார் நறுமலரைக் குஞ்சிதனிற் றரித்து
ஏதமிலாப் பாணமுடன் வில்லேந்திக்—காதலாய்
எம்பெருமான் சாலப் பசிப்பா ரெனவிரங்கி
நம்பனமர் வரையை நண்ணினர்—உம்பருக்கும்
எட்டாத நாத னிளைத்தனனென் றீண்டமுடி
வைத்தமலர் காற்செருப்பான் மாற்றியே—சுத்தமிகு
வாயிலுள்ள மஞ்சனத்தை யன்பையுமிழ் வார்போல
தாயனையார் சென்றிமிசை தான்விடுத்தார்—தூயசிரந்
தன்னிற் சுமந்த மலர்த் தாமமதைக் காளத்தி
மன்னற்குச் சூட்டி வணங்கியபின்—றன்னுகல்லை
மீதே கொணர்ந்த இறைச்சியைமெய் யன்புடனே
சாதுதிண்ண னரெதிரே தான்படைத்துக்—கோதகலக்
கோலதனிற் கோத்துக் கொழுத்த தசையை யெலாஞ்
சாலப் பதமுற்றிடச் சமைத்துச்—சீலமுடன்
பல்லா லதுக்கிச் சுவை நாவாற் பார்த்தீண்டு
கல்லைதனிற் கொணர்ந்தேன் காதலுற—மெல்லமெல்ல
உண்டருளு மென்று உரைத்தமுது செய்வித்த
கண்டனைய மென்மொழியார் காளத்தி—விண்டுறைவார்க்
கின்னமு மூன்வேண்டு மெனுமாசை கண்டிரவி
மன்னுகரங் கூப்பி மலைபுகுந்தான்—அன்ன பொழு
தவ்வமய மாலை யணைதலுமே கங்குறனில்
வெவ்விலங்கு தாக்கு மெனவெருவி—நவ்வியணி
சம்பு மருங்கிற் றனுவேந்து கையினராய்
சிம்புளென நின்றார் திறம்பாமல்—அம்புவியின்
வாழ்வை வெறுத்து வனம்போந்து மாதவஞ் செய்
சூழு முனிவருக்குந் தோற்றரிய—போழ்மதியார்
தம்மை யன்பிற்கண்டு தகவுடனே மாடுநின்றார்
வெம்மை நிசி நீங்கி விடிந்த பின்றை—பொம்மையெனக்
சண்டுயிலா நின்ற கரியமுகின் மேனியார்
அண்டர் பிரானுக் கமுது செய்ய—மண்டுபல
கேழன் மரைமான் கெழுமு மடவிதனிற்

போழுந் தனிவேட்டை போயினர்—ஆழியன்ன
வெங்கதிரோன் றானுதிக்க மிக்க சிவகோசரியார்
திங்கள்ணி வார்பூசை செய்திடவே—பங்கமிலாக்
கொய்த மலரும் புனலுங் கொண்டணைந்தா ராங்கவர்முன்
வெய்யதசை மென்புகண்டு வெய்துயிர்த்து—ஐயகோ
இந்த வனுசிதத்தை யார் செய்தா ரென்றிரங்கி
அந்தக் கிராதர்களே யாற்றினரென்—றுந்துமன
இன்னலடைந் தெந்தாய் திருமுன்பிதையயற்ற
பொன்னொளியார் செய்யா பொறுத்திருந்தீ—ரென்னபொறை
அந்தோ வினித்தாழ்த்தலாகா தெனக்கலுழ்ந்து
வெந்தவூ னென்புகல்லை மேவுமெலாம்—நொந்தகற்றி
மிக்காநதி மூழ்கி விரைந்து கடன் புரிந்து
அக்கணிவார் பூசனையை யாற்றியே—நெக்குமனம்
கண்ணீருகுத்துக் கழல் பணிந்து தன்னுறையுள்
நண்ணி வதிந்தார் நலனுறவே—புண்ணியஞ்செய்
தேறுசிவ கோசரியார் சென்றபின்னர் திண்ணர்
கோறு சிலை யேந்திக் கொடுங்கானிற்—சேறியங்கு
பொல்லா வராகம் புலவு மிகுமாக்க
ளெல்லா மறிந்துவிழ வெய்தெடுத்துச்—செல்லமருஞ்
சோலை செறி சூழலிற் போய்த் துய்ய அரணிதனிற்
சால வனலைத் தருவித்துக்—கோலலகால்
வன்றசையி னுள்ளே கொழுப்பறிந்து வார்ந்ததனை
மன்றக் கனலதனில் வக்குவித்துத்—துன்றினிதாய்
நல்லபத மாகவெந்து நாவில்ருசி பார்த்ததசை
கல்லை தனிற்படைத்துத் தேன் கலந்து—வல்விரைவாய்
நென்னல்போற் பூநீர்வாய் சென்னிகளி லேநிறைத்து
மன்னு நாகன்மதலை வந்தணைந்தார்—இன்னபடி
வந்துகா ளத்திமலையேறி வானவர்க
டந்தலைவ ஞரெதிரே தான்படர்ந்து—அந்தணஞர்
பூசையினிற் சாத்தும் பொருளெலா நீக்கியபின்
நேசமுறத் தான்பூசை நேர்கின்றார்—மாசகன்ற
ஊனமுது கல்லையுடன் வைத்திஃது முன்னையினுந்
தேனுங் கலந்துவிட்டேன் றித்திக்கும்—யானுமதை
நன்றாக நாவாற் சுவைபார்த்தே னாயகனே
தின்றருளு மென்றமுது செய்வித்துப்—பின்றாமல்
எப்பொழுது மிவ்வாறியற்றிவந்தார் கங்குறனிற்
றப்பனையார் தம்முன் றுயிலாமல்—செப்பரிய

தொடரும்.

கடோரசித்தன் கதை

ஸ்ரீமான் வ. சு. செங்கல்வராய பிள்ளை எம். ஏ. எழுதியது.

தருமரும் "நன்று, உடனே செல்லுக, தாமதிக்காதே, மறுபடியும் காலனை ஏவும்படி வைத்துக் கொள்ளாதே. உன் மனைவியை நன்றாய்க் கண்டித்துப்பயமுறுத்தி வா" என ஏவினர். உடனே கிளம்பிற்று கடோரசித்தனுடைய ஆவி; நுழைந்தது கண்ணபுரத்தில் தனது வீட்டின் வாயிலின் வழியாய்; புகுந்தது சேமித்து வைக்கிருந்த தனது சொந்த உடலில்; புகுந்ததும் எழுந்தனன்; ஐயா, கடோரசித்தன் உண்டனன் அங்குத்தயாராய் வைத்திருந்த உணவை; உண்டதும் மும்முறை "சங்கிலிக் கறுப்பண்ணு, சங்கிலிக் கறுப்பண்ணு, சங்கிலிக் கறுப்பண்ணு" எனக் கூவினன். கூவின மறு நிமிஷமே அயர்ந்து நித்திரை போயினன். நித்திரையில் கனவில், நாராயணமூர்த்தியின் திருவருள்பெற்ற சங்கிலிக் கறுப்பன் தன் எதிரில் புன்சிரிப்புடன் தோன்றி நின்று "அன்ப! மாயன் பெருமாள் உன்னை மன்னித்து விட்டனர். காலனை நீயே கூவி "என்னைக் கொண்டுபோ" என்று நீ கூறினுலொழிய காலன் உன்னை அணுகான். இப்பூலோக வாழ்க்கையிற் சுகம் என்று எண்ணப்படும் எல்லாப்போகங்களும் வைபவங்களும் உனக்குக் கிடைக்கும். உன்னுடைய ஜீவாத்மா ஒரு வாசனைத் தூபக்கால் போலும். வாசனைத்தூபங்கள் சற்று நேரம் வாசனை வீசி மறைகின்றன. அவை எரிந்த தூபக் காலோ அங்ஙனம் மறையாது விளங்குகின்றது. அதுபோல, வாழ்க்கைப் போகங்களெல்லாம் மறையுந் தன்மையன. ஆத்மா அழிவில்லாதது. உன்னை யமபட்டணத்தில் விசாரிக்கும் போது தூபக்கால் சுத்தியாயிருந்ததா என்று கேட்பார்களே ஒழிய தூபக்காலில் இட்ட பொருள்கள் வாசனை வீசினவா எனக் கேட்கமாட்டார்கள். இதன் பொருள் ஞாபகமிருக்கட்டும்" எனக் கூறி மறைந்ததைக் கண்டனன். காலையில் விழித்தெழுந்தனன் கடோரசித்தன். கண்ட கனவின் முதற்பகுதி மட்டும் அவன் நினவுக்கு வந்தது. பிற்பகுதியை மறந்துவிட்டான். "நானே கூப்பிட்டாலொழிய காலன் எனையணுகான். என் சந்ததிகளுக்கு நான் இருப்பது பெரிய அனுப்பாயிருக்கும். சகல பாக்கியமும் எனக்குக் கிடைக்கும் எனத் தான் வரம்

பெற்றுள்ளேனே ! நான் ஏன் காலனைக் கூப்பிடவேண்டும் ? ஹா ! ஹா ! எனது குலதெய்வம் சங்கலிக் கறுப்பணத்தேவர் கருணையே கருணை, பெருமாளுக்குச் சரியான குல்லா போட்டு விட்டார்.'' என நினைந்து நினைந்து மகிழ்ந்தான். வரம் பெற்றவாறே சகல செல்வமுங் கடோரசித்தனுக்கு எய்தியது. அவன் பெரிய வர்த்தகனானான். அநேகங் கப்பல்களுக்குத் தலைவனானான். குபேரனொத்த நிதிபதியாயினன். கிட்டிய செல்வங்கொண்டு போர்வீரர்களைத் திரட்டிப் பல தேசங்களைக் கைக்கொண்டான். திருவுடை மன்னனாய்ச் சக்கிரவர்த்தியாய் அத்தேசங்களை ஆண்டு வந்தான். நீதி மன்றங்களை ஏற்படுத்தி அவைதமக்குச் சிறந்த நியாயாதிபதிகளை நியமித்தான். கோயில்களுக்கெல்லாம் பக்தி நிரம்பிய குருக்கள்மார்களைக்கொண்டு பூஜை முதலிய நடப்பித்தான். கண்ணபுரமே இத்தேசங்களுக் கெல்லாம் தலை நகராயிற்று. குக்கிராமமாய் இருந்த அவ்வூர் வான்களாவும் மாடமாளிகைகளும்கூட கோபுரங்களுமாய் விளங்கிற்று. காடுஞ் செடியுங் கள்ளரம் மிருகங்களுமாயிருந்த இடங்களெல்லாம் வயலும் நீரும் வீடும் குடியுமாய் இலகின. கோயில்களையுங் குளங்களையுங் கடோரசித்தன் கட்டினது பத்திகாரணகாக அல்ல ; தன்னை யாவருங் கொண்டாட வேண்டும் என்னும் பெருமை காரணமாகத் தான். வரி, கப்பம், வியாபாரலாபம் எனப் பல வழியாகப் பொருளைச் சேகரித்தான். பல்லாண்டு இவ்வாறு சகல செல்வ போகங்களின் இடையே களிப்புடன் இறுமாந்திருந்தான். பின்னர், வயது செல்லச்செல்ல மூப்பின் இலக்கணங்கள் வெளிப்பட்டன. நரை திரை ஏறின ; வாய்ப்பல் உதிர்ந்தது ; முதுகு வளைந்தது ; நோக்கம் இருண்டது ; இருமல் வந்தது ; தூக்கம் ஒழிந்தது ; மொழி தளர்ந்தது ; நோய் பிடித்தது ; ஏக்கம் முந்தின ; பாய் விடேன் என்றது ; சலமலங்களின் நாற்ற மெழுந்தது காடு வா என்றது ; வீடு போ என்றது ; கடவுளை ஏமாற்றி விட்டோம் என்று மனிதர் நினைப்பது வழக்கம் ; கடவுளை ஏமாறவில்லை என்பது ஈற்றில் தான் புலப்படும். நோயிலா வாழ்வுதானே வாழ்வு. நோய் முதிர முதிரத்தான் ஈட்டிய செல்வ மெல்லாம் செல்வமாகத் தோன்றவில்லை. விருந்துணவு மருந்துணவு ஆயிற்று. பொருள் பொக்கிஷத்தில், பிரபு படுக்கையில் என்றாயிற்று. நோயின் கொடுமையைப் பொறுக்க முடியாமல் ஒரு நாள் இரவு “ யமதருமராஜரே! என்னைக்கொண்டு போம் ” எனத்தன்னை மறந்து முறையிட்டு அழுதான். உடனே கூற்றுவன் தோன்றிக் கடோரசித்தன் உயிரைக்

கொண்டு சென்றனன். கடோரசித்தன் மாள்வதேது எனச்சலித்திருந்த சந்ததிகள் அவன் மாண்ட வுடனே அவன் உடலத்தை வாசனைத்திரவியங்களிட்டுத் தகனஞ் செய்தனர். பிறகு, அவன் எலும்புகளைச் சேமித்து ஒரு விசித்திரமான கட்டாய் கட்டி அதன் மீது,

> " காலனைக் கட்டிய கடோரசித்தப்ரபு
> இவர் பெயர் என்றும் நிலவுக எங்கும்"

எனச் சாசனம் எழுதி வைத்தனர்.

கடோரசித்தனது சந்ததியார் ஆட்சி செய்து வந்தவரையும் ஜனங்கள் கடோரசித்தனது ஆற்றலையுஞ் செல்வத்தையும் புகழ்ந்தார்கள். அவனது குற்றங்களை வெளியிட அஞ்சினார்கள். புலவர்கள் அவனை "மகாயூகி" எனப்பண் பாடினார்கள். அரசர்கள் அவனைப் "பூலோகதனதன்" எனக்கொண்டாடினார்கள். ஆனால், அவனுடைய சந்ததிகள் அற்ற பிறகு கடோரசிததனது கொடுஞ் செயல்கள் இவை ; அவன் நரகத்தில் இன்ன இன்ன வேதனைப்படுகின்றான் என்று ஜனங்கள் பலவாறு பேச ஆரம்பித்தார்கள். திரிகால ஞானமுள்ள ஒரு பெரியவர் மூலமாக கடோரசித்தன் நரகிற்படும் வேதனை இத்தன்மைத்து என உலகினருக்குத் தெரிய வந்தது. அது பின் வருமாறு.

நரகங்களில் ஒன்று இருள்சூழ் நரகம். அதில் ஒரு பாகத்தில் ஒரு எரிமலை இருக்கின்றது. அங்கே தனியாகக் கடோரசித்தப் பேய் ஓயா வேலை செய்து வருகின்றதாம். பாட்டு பாடிக்கொண்டே அந்த மலை உச்சிக்கு அடிவாரத்தினின்று உருண்ட ஒரு பெரிய கல்லை உருட்டிச் செல்கின்றது. உச்சியில் சேருஞ் சமயத்து அக்கல் உருண்டு கீழே விழுந்து விடுகிறது. பின்னர், அந்தக்கல்லை உச்சிக்குக் கொண்டு போகின்றது; மறுபடிம் அக்கல் கீழே உருண்டு விழுகிறது ; அக்கல்லை இப்படி உச்சிக்கு ஏற்றுவதும், அது உருண்டு உச்சியினின்று கீழே விழுவதும், மறுபடியும் உச்சிக்கு அக்கல்லைக் கொண்டு போவதும் தான் அப்பேய்க்கு வேலையாம். என்றைக்கு அந்தக்கல் மலை உச்சியில் நிலைத்து நிற்குமோ அன்றுதான் நரக த்ண்டனை முடிவு பெறுமாம். கடோரசித்தப் பேயோ அத் துன்பத்திற் சிறிதேனும் கவலை யடையாமற் பாடிக்கொண்டே வேலை செய்து கொண்டிருக்கும்போது நரகலோக காட்சிகளைக் காண நாரத முனிவர் ஒருமுறை சென்றனர். பலவித தண்டனை

களில் உயிர்கள் படும் பாடுகளைக் கண்டனர். ஈற்றிற் கடோரசித்தப் பேய் பாடும் பாட்டு இவர் காதிற் கேட்டது. இஃதென்ன! விந்தையிலும் விந்தை! ஆனந்தமான பாடல் இவ்விருள்சூழ் நரகிடையே கேட்கின்றதே என ஆச்சரியப்பட்டுக் கடோரசித்தப் பேய் பாடிக்கொண்டு வேலை செய்யும் இடத்துக்குச் சென்றனர். அப்போது அந்தப்பேய்

1. அறிவுக்கே ஆக்கமென் றுருளாய் கல்லே!
அறிவிலார்க் கேக்கமென் றுருளாய் கல்லே!

2. புத்திக்கே யோகமென் றுருளாய் கல்லே!
புத்திக்கே போகமென் றுருளாய் கல்லே!

3. உள்ளதைக் கற்கவே உருளாய் கல்லே!
உச்சியில் நிற்கவே உருளாய் கல்லே!

4. என்றுமே இன்பமென் றுருளாய் கல்லே!
எங்குமே இன்பமென் றுருளாய் கல்லே!

எனப் பாடிக்கொண்டிருந்தது. இங்ஙனம் பாடுவதையும் கல் உருண்டு கீழே விழுவதையும் மறுபடியும் பாடிக் கொண்டே கல்லை உச்சிக்குக் கொண்டு போவதையுங் கண்ட நாரத முனிவர் ஆச்சரியப்பட்டு "யாரப்பா நீ! மிக இனிய குரலுடன் பாடி இவ்விருண்ட நரகிடை இன்பந் தருகின்றாய்?" என வினவினர். அதற்கு அப்பேய் "பூலோகத்தில் நான் வாழ்ந்தபோது எனக்குக் கடோர சித்தன் என்று பெயர். இவ்விருள் நிறைந்த நரகிடை வந்தும் பூவுலகிலிருந்த என் புத்தியைக் கைவிடாது, துன்பமே இன்பம் எனப்பாராட்டி வருகின்றேன். இந் நரகிடை என்னை விசாரணை செய்த தருமராஜர் எனக்கு "ஓயா வேலை" என்னும் பெரிய தண்டனையை விதித்தனர். வேலை இன்பம் பயக்கும் என்று அவர் அறியார் போலும். பூலவுலகில் தண்டனை யடைந்தோர் விலங்கு பூண்டிருந்தும் சிறைச்சாலைகளில் வேலை செய்யும்போது பாடிக் கொண்டு காலங் கழிப்பதை எங்கள் தருமராஜர் பார்த்ததில்லை போலும்" எனக் கூறி நகைத்தது. அதற்கு நாரதர் "பூலோகத்திற் சிறையுற்றோர் பாடுகிறார்கள் என்றாயே; ஒருகாலத்தில் தமது தண்டனை முடிவு பெறும் என்னும் உணர்ச்சி அவர்களுக்கு உள்ளபடியால அவ்வேலை அவர்களுக்கு இன்பமாகத் தோன்றி அவர்கள் பாடுகிறார்கள். உனக்குத்தான் முடிவுபெறாத வேலையாயிற்றே! உனக்கு எப்படி இன்பம் உண்டாகும்?" என்றனர். அதற்கு "இந்தக்கல் உச்சியில் சேர்ந்து நிற்கும் என எனக்கும் ஒரு உணர்ச்சி இருக்கிறது. உச்சியில் சேர்ந்ததும் உலவா இன்பம் எனக்குக் கிட்டுமல்லவா?" என்றது அந்தப்பேய். உச்சியில் சேர்ந்து நிற்காவிட்டால் உன் கதி என்ன என வினவினர் நாரதர்.

ஸ்ரீ ஹர்ஷ சரிதம்

ஸ்ரீமான் ச. செல்லம் எழுதியது.

திக்குவிஜயம் (ரு)

இப்பொழுது ஆஸாமென்று அழைக்கப்படுகிற காம சுவரூபத்தை பாஸ்கர ரவிவர்மனென்ற அரசன் ஆண்டுவந்தான். ஹர்ஷர் அரசேற்றவுடன் அவரோடு நட்புரிமை பூண்டு கொண்டார். ஹர்ஷர் தமது தமயனைக் கொன்ற கர்ணசுவர்ணத்தரசனாகிய சசாங்கனைக் கொல்லப் போகையில் பாஸ்கர ரவிவர்மனுடைய உதவி கிடைத்தது. கி. பி. 619-ல் சசாங்கன் தன் சாசனத்தால் தன்னை மஹாராஜாதிராஜன் என்று அழைக்கப்பட்டிருக்கிறான். ஆகையால் அது வரையிலும் ஹர்ஷர் அவனை வெல்லவில்லை யென்று விளங்குகிறது. இதை எழுத்துக்களின் வடிவத்தாலும் பாஷையின் நடையாலும் பிற்காலத்த தெனச் சிலர் கூறுகிறார்கள். அதெங்ஙனமாயினும் ஹர்ஷர் சசாங்கனைக் கொன்று அவன் நாட்டை தமது நாட்டோடு சேர்த்துக் கொண்டான். ஹர்ஷருடைய திக்கு விஜயத்தைப் பற்றி யுவாங்சுவான் கூறுவதாவது.

"ஹர்ஷருடைய அமைச்சர்கள் முதலில் படையாளிகளையும் படை பயிற்றுபவர்களையும் தெரிந்தெடுத்தார்கள். ஐயாயிரம் யானைகளும் இருபதினாயிரம் குதிரைகளும் அன்பதினாயிரம் காலாட்களுமிருந்தன. கிழக்கே யிருந்து மேற்கே போர்புரிந்துகொண்டு சென்றனர். இவ்வேளைகளில் படைகளை சிரம பரிகாரஞ் செய்து கொள்வதற்கும் வழியில்லை. ஆறு ஆண்டு கொண்டு பாரத நாடு முழுதும் கைப்பற்றிக் கொண்டார். நாட்டைப் பெருக்கியதின் பிறகு படைகளைப் பெருக்கினார். அறுபதினாயிரம் யானைகளும் ஒரு லக்ஷம் குதிரைகளும் இப்போது மிருக்கின்றன. முப்பது வருஷங்களுக்குப் பிறகு போர் புரிவதை நிறுத்தி சமாதானமாக நாடாண்டு வந்தார்.

யுவாங்சுவானுடைய மொழிகளால் ஹர்ஷர் முதலில் போர் புரியச் சென்ற இடம் இப்போதைய வங்காளம் பிஹார் முதலிய நாடுகள் இருக்குமிட மென்று தெரிகிறது. அப்போது அப்பாகத்தை அரசுபுரிந்து வந்தவர்கள் கர்ணசுவர்ண அரசனாகிய சசாங்

கன் மகதராஜாவான மாதவகுப்தன், முகர குலத்தில் பிறந்த போக வர்மன் காமரூபராஜாவான பாஸ்கரவர்மன் முதலானவர்களே.

இதில் சசாங்கனைத் தன் தமயனைக் கொன்றவனுகையால் அவனைக்கொன்று பழிக்கு பழிவாங்கினன். தனே அவரத்திற்கும்மகதத திற்கும் உறவுள்ளத்தினல் ஹர்ஷருடைய தலைமையை ஒரு சண்டையுமின்றி ஏற்றுக் கொண்டது போகவர்மனையும் தன் சிற்றரசனுகச் செய்ய ஷர்ஷருக்கு மிக எளிதாக முடிந்தது.

வட இந்தியாவின் கீழ் பகுதி இவ்வாறு கைப்பற்றினதின் பிறகு வடமேற்கு பாகத்திற்கு தன் படைகளை அனுப்பினர். முதலில் நேபாளத்தோடு போர் தொடர்ந்தார்கள். அதையப் போது அம்சுவர்மன் ஆண்டு வந்தான். அவனையும் வென்றார். இங்ஙனம் ஹர்ஷர் ஐராவதியாறு முதல் பிரம்மபுத்திரா நதி வரையிலுமுள்ள நாடுகளை தன்வசமாக்கினர். பின் சற்று வாளாவிருந்தார். கி. பி. 620-தை யடுத்து பிறகும் போருக்குப் புறப்பட்டு விட்டார். இப்போதைய எதிரி மஹாசக்திவாய்ந்தவனும் தென்னடு முழுவதும் அடக்கி யாளுபவனுமான சாளுக்கிய ராஜாவான புலகேசி யென்பவன். தென்னட்டில் அப்போது சக்தியுள்ள பல்லவராஜாவான மஹேந்திரவர்மனை இவன் பல முறையும் வென்று விருது நேடியுள்ளான். புலகேசியோடு போர் தொடர வந்த ஹர்ஷர் தோற்று விட்டார். இது விவரங்கள் பல கல்வெட்டுகளால் புலனுகின்றன. புலகேசியால் போற்றப்பட்ட புலவனுகிய இரவிகீர்த்தியென்பவன் புலகேசியின் வெற்றியைப் பற்றி பாடியுள்ளான். புலகேசியோடு போர்தொடர வரும்போது ஹர்ஷருடை நாட்டின் தென் எல்லை நருமதா நதி.

புலகேசியைப் பற்றி யுவாங்சுவான் கூறுவதாவது " க்ஷத்திரியனும் வீரனுமான அம்மன்னன் வெற்றியையே முக்கியமாக எண்ணி வந்தார். அதினுல் படைகளை போர் வீரர்களாக்க முடிந்தது. போரைப்பற்றின விவரங்களெல்லாம் யாவரும் அறிந்திருந்தனர். அதிலிருந்து சற்றும் நழுவவில்லை. படைத்தலைவர்கள் போரில் தோற்று விட்டால் அவருக்கு மெய்க் கூறு செய்யும் தண்டனைகளை விதிப்பதில்லை. ஆனல் பெண்களின் அணியாடைகளை அவருக்கு அணியச்செய்வான். இதால் வீரமில்லாதவரென்று அவரை எளனஞ் செய்வதாகும். அவமானத்திற்கு அஞ்சின அப்படைத் தலை

வர்கள் ஜீவனை திரணமாக எண்ணி துணிந்து நின்று போர் செய்து வருவார்கள். அதில் தோல்வியுற்று ஓடிவரமாட்டார்கள். வெற்றி இல்லையேல் சாவு. எப்பொழுதும் இங்ஙனம் வீரமுள்ள பல படைகளையும் யானை குதிரை முதலியவைகளையும் வைத்துக் கொண்டிருப்பான். இவருடைய உதவியால் வேற்று மன்னரைக் கூட்டாக்கவில்லை'' இப்படைகளோடு ஹர்ஷரும் தன் படைகளையெல்லாம் அனுப்பி வெற்றிபெற முயன்றார். ஆனால் அது முடியவில்லை.

பிறகும் சில காலம் ஹர்ஷர் போர்ச் செயலை விடுத்து வாளாது வாழ்ந்து வந்தார். கி. பி. 633—640 அவர் குஜராத்திலுள்ள வலபி நாடு, அதற்கு கீழடங்கின ஆனந்தபுரம் கச்சா, சுராட்டிரம், முதலிய நாடுகளையும் அடக்கினர். பிறகு சிந்து காஸ்மீரம் பிடித்தார். பாரதத்தின் வெளியேயுள்ள நாடுகளோடும் ஹர்ஷர் இடைபெற்றிருந்தார். சீனச்சக்கிரவர்த்தியின் நேசத்தை சம்பாதித்துக் கொண்டனர். இருவரும் தூதுவர் மூலம் தங்கள் நட்புரிமைகளை உறுதிப்படுத்தி வந்தனர். ஆனால் அது வலுவடையுமுன்பு ஹர்ஷருக்கு மரண முண்டாயிற்று.

ஹர்ஷருடைய போர் முறைகள் வருமாறு. எங்கும் அமைதி நிலவி நிற்கும் மூன்றாம் யாமத்தின் முடிவில் இடிமுழக்கிற் கொப்பாக பேரிகைகள் முழங்குவன. பின் பிரயாணத்தைக் குறிப்பிட்டு இரண்டாவது பேரிகையின் ஒலி யெழும். பின் வாத்தியங்களுடைய ஒலியும் யானைகளுடைய விளியும் சங்கங்களுடைய ஓசைகளு முண்டாகும். படைகள் முழுவதும் இரைச்சலுண்டாகும். ஒவ்வொரு படைத் தலைவர்களும் தங்கள் தங்கள் படைகளை அழைக்கின்ற ஒலியும் அவர்கள் புறப்பட ஆயத்தமாகும் ஒலியும் மிக முழுங்கா நிற்கும். வீரர்கள் தாங்கும் விளக்குகள் இரவை மறைத்து ஒளி வீசா நிற்பன. படைக்கத்தினருகில் படைகள் தங்க கூடாரம் உபயோகப்படுத்தி வந்தனர். அவைகளை யானைகள் போர்முனைக்குச் சுமந்து சென்றன. தங்கள் பொருள்களை வைத்துக் கொள்ள ஒவ்வொருவருக்கும் தோற்பைகள் இருந்தன. யானைகள் மணியோ யோசையோடு விரைந்து நடந்து செல்வன. படைவீரர்கள் மனைவி மக்களை தங்களோடு கூட்டிச் செல்லுவார்கள். படைவீரர், குதிரை வீரர் யானைவீரர் முதலியோர் அரமனை வாயிலண்டை வந்து நிற்

பார்கள். அங்கே குறுநில மன்னர்கள் அரசன் வருகையை எதிர் பார்த்தவண்ணம் நிற்பார்கள். சாமரை, குடை முதலியவற்றைக் கொண்ட அரச விருதுகளோடு அரசர் வருவார். சூரியன் உதய மானதோடு சங்கம் முழங்க யானை யேறி வருவார். யாவரும் போர்முனை நோக்கிச்செல்வார்கள். உணவு பொருள்களை சுமந்து கொண்டு போகும் ஒட்டகைகளை ஒட்டிக் கொண்டு சிலர் பின் செல்வார்கள். யுத்தத்தில் முக்கியமாக வில்லும், வாளும், சூலமும், தண்டமும் ஆயுதங்களாக விருந்தன. பாணன் வருணிக்கும் மொழிகளால் ஹர்ஷர் பெரிய போர் வீரராகவும் போர் வீரருக்கு நேசமுள்ளவராகவும் மந்திரிகளை விசுவாசித்து வந்தவ ரென்றும் கீழ்ப்பட்ட குறுநில மன்னர்களுக்கு சுதந்திரம் வழங்கி வந்தவ ரென்றும் புலனுகிறது. ஆகவே ஹர்ஷர்தன் போர் வலியால் வட நாடு முழுவதும் தன் ஆணைகள் செங்கோல் செலுத்தி வந்தார்.

(தொடரும்)

அமெரிக்கக் கப்பல் படை மந்திரி 70 கோடி டாலர் செலவு செய்து யுத்தக்கப்பல்கள் கட்டுவதாய் ஒரு திட்டத்தை காங்கிரஸில் ஆஜர் செய்திருக்கிறுராம்.

***

சீனுவில் பொதுவுடமைக் கலகம் மிகுதியாயிருக்கிறதென்றும் சீனு சென்ட்ரல் பாங்கி அடியுடன் நாசமாக்கப்பட்டதென்றும் அறிவிக்கப்படுகிறது.

***

ஸ்டக்கார்ட்டில் உயிருடன் புதைக்கப்பட்ட ஜர்மன் சாது 120 மணி நேரம் சென்ற பிறகு சில தினங்கள் முன் வெளியே எடுக்கப்பட்டு உயிருடன் இருக்கிறுராம்.

***

பிரிட்டிஷார் அமெரிக்காவிடம் வாங்கியிருந்த கடனுக்கு முதலுக்காக 1,20000000 டாலர்களும் வட்டிக்காக 6,82980000 டாலர்களும் செலுத்தி யிருக்கிறுர்களாம்.

***

ரப்பரில் செய்யப்பட்ட பாய்கள், மேஜை விரிப்புகள், மெத்தைகள் இன்னும் வீட்டிற்கு வேண்டிய சாமான்கள் லண்டனிலுள்ள வெஸ்டு மினிஸ்டரில் ஸென்ட்ரல் ஹாலில் ஏற்பாடு செய்யப்பட்ட ரப்பர் காட்சியில் காட்டப்பட்டன.

***

இந்தியர் புறமதம் புகுவதேன்?

ஸ்ரீமான் S. அருணசலம் பிள்ளை எழுதியது.

பரத கண்டத்தின் பல்சமயங்களுள்
சைவம் வைணவமாகிய விரண்டுமே!
சுருதியுக்தி அனுபவம் மூன்றும்
முறையே பொருந்த மூப்புடைத் தென்பதை
ஆராய்ச்சி யாள ரறிவராயினும்
இவ்விரு மதங்களிலிருந்து விண்ணெய்திய
பக்தி மான்கள் பலர் தம் சரிதையை
உற்று நோக்கி முற்ற உணர்ந்தார்
மற்றோர் மதத்தை மனத்தினும் கருதார்.
எனினும் இந்தியர் இதர மதங்களில்
ஏராளமாக ஏகுதற்குறிய
காரண யாதெனக் கழறக் கேண்மின்!
இப்புவியதனில் இறைவன் வகுத்த
எப்பிறவியினும் ஏற்றமிக்குடைய
இந்தியராகும் மன்பதையாளர்
மேல் கீழ் சாதியாம் மேட்டிமை கொண்டு
தூற்றிச் சிலரைத் தூர நில்லென்பதும்
விலகுவிலகென விலங்கொடு மதிப்பதும்
பின்பவர் புறமதம் போய்ப் புக்காராய்
அன்னிய நாட்டாராசாரத் தொடு
ஆங்கிலங் கற்று அரசாங்கத்தின்
உத்தியோகத்தில் உயர்த்தப்பட்டால்
சார்சா ரென்றே சமமாய்க் கொண்டு
தொண்டு புரிவதும் உண்டுகளிப்பதும்
என்னென்றுரைப்போம்! என்னென்றுரைப்போம்!
இச்சாதிபேதமே சமய இழுக்காய்
எத்தனை மாந்தரை இதரமதங்களில்
இழுத்துச் சென்றது எண்ணவும் படுமோ!
அந்தோ! அன்னிய நாட்டார் அவர்தம் மதத்தை

அகில மெங்கும் பரப்பும் வாவால்
செய்யும் சூட்சி வையகத் தறிந்தும்
நித்தனும் நிமலன் நீழ் நில வாழ்வில்
பக்தராய்க் கொண்டு முக்தியளித்த
சைவசமயத் தறுபத்து மூவர்
வைணவந்தழைக்க வந்த பன்னிருவர்
இல்லறம் துறவற மிரண்டின் வழியே
இறைவன் பதமல ரெய்திய பல்லோர்
அத்தனை பெயரையு மாராய்ந்து பார்ப்பின்
எக்குலத்தவரென இறை எண்ணியதோ !
அவர்தம் ஒழுக்க முறையால் உயர்வு பெற்றமை
உண்மை நூல்கள் உணர்த்தக் கண்டும்
ஆங்கில ஆட்சி அவ்வழி நின்றும்
நாமேன் ! நடுவிலா நமன்போல்
நிட்டூரமாக நின்றிடவேணும்
இவ்வாறிருப்பின் இந்தியர் பல்லோர்
ஆண்டுதோறும் அயல்மதமேகி
புறச்சமயத்தொகை பூமியில் மிகவே
இந்து சமயம் இருந்தெடந்தெரியா
திறந்து படுமென இயம்பவும் வேண்டுமோ !
ஆதலின் மேதையீர் ஆண்டனமைப்பில்
கீழ்மே லென்னும் கிளைகள் வேண்டாம்.
தாய்நாட்டினரைச் சமமாய் மதித்தே
உண்மைவழியை உலகிலுணர்த்தி
சைவம் வைணவம் தழைத்தோங்கிடவும்
ஒழுக்கமுறையாலுயர் கதிபெறவும்
எல்லாம் வல்ல இறைவனிணையடி
என்றும் எத்திநின்று தொழுவோம்.

யுத்த காலத்தில் சர்க்கார் அவசர நிமித்தம் செய்த சில நடவடிக்கைகளாலும் திட்டங்களாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்காக நியமிக்கப்பட்ட லண்டன் நியாயஸ்தலத்தார் 90 லட்சம் பவுன் நஷ்ட ஈடு அளிக்க உத்திரவு செய்திருக்கிறார்களாம்.

மதுசாரம்

(காபிரைட்)

(ஸ்ரீமான் ஏ. சொக்கலிங்கம்பிள்ளை எழுதியது)

(முன் 206ம் பக்கத் தொடர்ச்சி)

IV

மதுசாரம், ஜீரணசக்தியுள்ள சூக்குமரந்திரங்களைக் கெடுக்கின்றது.

தேகத்தின் சூக்குமரந்திரங்களுக்கு ஆகாரம் வேண்டும். ரொட்டி, வெண்ணெய், களி, முட்டை, பால், பழம் முதலிய ஆகாரங்கள் சூக்குமரந்திரங்களைப் போஷிப்பதற்கு முன்னே அவை ஜீரணமாக வேண்டும்.

ஜீரணமாவ தென்ன?

ஆகாரம, சீரண ரசங்களால் கரைந்து இரத்தத்திற் கலந்து, சூக்குமரந்திரங்களுக்கு உபயோகமாகும்படி மாறுதலடையுஞ் செயலே ஜீரணமாம்.

அச்சீரணம். பூரணமாய் நடைபெறுவிட்டால் சூக்குமரந்திரங்கள் பசியால் வருந்தித் தேகத்தின் தொழிலும் நின்றுவிடும். ஆதலால், சீரணக்கிரமத்தை நாம் தெரிந்துகொள்வது மிக அவசியமாகும். ஏனெனின், மற்றச் சூக்குமரந்திரங்களினும் சீரண சக்தியுள்ள சூக்குமரந்திரங்கள், சிலவேளை வெகு சீக்கிரத்தில் மெலிந்து தேகத்தில் அசௌக்கியத்தையும் நோயையு முண்டாக்குகின்றன. இவ்வாறுவது, பெரும்பான்மையும் தேகத்திற்கு ஆகாததை விலக்காமலிருப்பதேகாரணமாம்.

ஜீரண உறுப்புக்கள்.

சீரணம் தேகத்தினுள்ளே 32 அடி நீளமுள்ள வழியாகச் செல்லுகின்ற இரைக்குழலில் (Alimentary Canal) நடைபெறுகின்றது. அஃதெப்படி? சீரணசக்தியுள்ள சூக்குமரந்திரங்கள் தேகத்தின் பல பாகங்களிலு மிருக்கின்றன. அவை, இரைக்குழவின் வழியாகச் செல்லும் ஆகாரத்தின்மீது சீரணரசங்களைச்

சொரிவதால் அவ்வாகாரங் கரைந்து உடம்பின் கூறுவதற்குச் சித்தஞ் செய்கின்றன. ஆகாரம் தேகத்தில் உபயோகப்படும் வரையும் மேலும் மேலும் சென்று கொண்டிருக்கும். அல்லது தேகத்திலிருந்து வெளியே கழிந்து விடும்.

நாழன்னும் ஆகாரம் என்னவாகிறது.

வாய்க்குள் செல்லும் ஆகாரத்தைப் பற்கள் சிறு சிறு துண்டுகளாக நொறுக்கி அரைக்கின்றன. ஆகாரம் அரைபடும்போது தேகத்திலுள்ள மேன்மையான கோளங்கள் (glands) அவ்வாகாரத்தில் உமிழ்நீரைச் சொரிகின்றன. அவ்வுமிழ்நீர் (Saliva) அவ்வாகாரத்திலுள்ள பசைமாவை (Starch) ச்சர்க்கரையாக மாற்றுகிறது. பிறகு, அவ்வாகாரம், வாய்க்கும் வயிற்றுக்கும் இடையிலுள்ள இரைக்குழலின் வழியாய்ச் சென்று, ஆகாரத்தைத் தேகத்திற்கு உதவும்படி நீண்ட நேரம் சேர்த்து வைப்பதான வலுவுள்ள இரைப்பைக்குள் சேருகின்றது.

இரைப்பை (Stomach) ஆகாரத்தை மேலுங்கீழுமாகப் புரட்டுகிறது.

ஆகாரம் இரப்பைக்குள் சேர்ந்ததும் அப்பையிலுள்ள தசைகளின் இயக்கத்தினால் (movements) ஆகாரம் மேலுங் கீழுமாகப் புரட்டப்படுகிறது. அதே சமயத்தில் அதிலுள்ள 5,000,000 சிறு கோளங்களிலிருந்து 1 தீபனநீர் (gastric juice) சொரிகின்றது. அத்தீபன நீர், முட்டை, மாமிசம், பட்டாணி முதலிய தசைகளை வளர்க்கும் ஆகாரங்களை (Protein foods) யிளக்கிக் கரையச்செய்ய அவசியமாகிறது.

2. அமிலங்கள் (acids) சீரணத்திற்கு உதவியாகவும், ஆகாரத்தோடு சேர்ந்து வரக்கூடுமான கிருமிகளை (Bacteria or germs) க்கொல்லவும் உபயோகப்படுகின்றன. ஆகாரம் இரைப்பையிற் சேர்ந்ததும் உடனே சீரணித்த சிறிது ஆகாரம் இரத்தத்திற் சேருகிறது ; மிஞ்சியது சிறுகுடலுக்குள் செல்லுகின்றது. அதிலுள்ள கொழுப்பான ஆகாரங்களையும் பித்தாசயத் (ஈரல்—liver)திலிருந்து பெருகும் பித்த நீர் (bile) சீரணமாக்குகின்றது. இன்னும் சீரணமாகாத பசைமாவுள்ள ஆகாரம் (starchy food) ஏதேனு மிருந்தால் அது கணைய நீரால் (pancreatic juice) சீரணிக்கப்பட்டு சீரண வேலை முடிந்து விடுகிறது.

ஆகாரம் எப்படிச் சீரணிக்கின்றது.
ஆகாரம்.

1. வாயின் வழியாய்ச் சென்று, அங்கே அது மெல்லப் படுகிறது. அதிலுள்ள பசைமாவும் சர்க்கரையும் உமிழ்நீரால் கரைக்கப்படுகிறது.

அவ்வாகாரம்.

2. வயிற்றினுள் செல்லுகின்றது. அவ்வாகாரத்திலுள்ள தசைகளை வளர்க்கும் பொருள்கள் தீபனநீரால் கரைக்கப்படுகின்றன. சீரணமான சிறிது ஆகாரம் இரத்தத்திற் சேருகிறது.

மற்றவை.

3. குடல்களுள் செல்லுகின்றன. கொழுப்புக்கள் பித்தநீரால் கரைக்கப்படுகிறது. மிஞ்சிய ஆகாரத்தைக் கணைய நீர் கரைக்கிறது. சீரணமான ஆகார முழுவதும் இரத்தத்தில் சேருகிறது.

இரசாயனிகள் ஆகாரத்தை இரத்தத்தில் செலுத்துகின்றன.

சிறு குடலுக்குள்ளே மேன்மையான சிறு குழல்களிருக்கின்றன. அவைகட்கு இரசாயனிகள் (Villi-இரசம்-சாரம், அயனி-கொண்டுபோதல்) என்று பெயர். அவை சீரணமான ஆகாரத்தினிடையில் புடைத்து நிற்கும். அவற்றுள் அநேக மெல்லிய இரத்தக் குழல்களிருக்கின்றன. அவை சீரணமான ஆகாரத்தை உறிஞ்சி இரத்தக்குழல்களில் சேர்க்கின்றன. அவ்விரத்தம் தேகத்தின் எல்லாப்பாகங்களிலு முள்ள சூக்குமரந்திரங்களுக்கும் போய் உதவியாகின்றது.

மதுசாரமும் சீரணமும்.

மதுசாரம், அமீபா (amoeba) வைப்போன்ற ஒரே சூக்குமரந்திரமுள்ள பிராணிகளைக் கெடுக்கின்றதென்று நாம் முன்னமே தெரிந்திருக்கின்றோம். இரைப்பையினுள்ளிருக்கும் சூக்குமரந்திரங்கள் மேற்சொன்ன அமீபாவைச்சிறிது ஒத்திருக்கின்றன. அவற்றின் முக்கிய வேலை தீபன நீரைச் சொரிவதேயாம். மதுசாரம் அவ்வேலையைத்தடை படுத்தி, அதிமுக்கியமான தீபனநீரைச்சொரி

யும் சக்தியையும் வன்மையையுங் குறைத்து விடுகின்றது. அன்றியும், அது இரைக்குழலின் உட்பக்கத்திலிருக்கும் மேன்மையும் எளிதிலுணருந் தன்மையுமுள்ள சவ்வுபோன்ற தோலுக்கும் அதற்கு அடுத்துள்ள வலேபோலும் பின்னலான மெல்லிய இரத்தக்குழல்களுக்கும் நரம்புகளுக்கும் எரிச்சலேயும் அழற்சியையு முண்டாக்கி இரைக்குழல் முழுவதையும் சிவப்பாக்கிக் கெடுத்துவிடுகின்றது. ஆதலால், மதுசாரம், எரிச்சலேயும், அழற்சியையும், மயக்கத்தையும், நரம்புகள் சுரணையற்றுப் போவதையுஞ் செய்யு மருந்தாகும்.

கண்ணில் ஒரு துளி பிராந்தி (brandy)யை விட்டால், அது பொறுக்கமுடியாத நோயையும் எரிச்சலேயும் மனோவேதனையையு முண்டாக்குவதுபோலவே, மதுசாரம், மேன்மையான இரத்தக்குழல்களுக்கும் வயிற்றுக்கும் குடல்களிவற்றின் நரம்புகளுக்கும் அழற்சியையுண்டாக்கிச் சீரணத்தைக் கெடுத்து நோயையும் மனோவேதனையையு முண்டாக்குகின்றது.

சீரணம் மெதுவாக நடைபெறுமாயின் தேக போஷணங்குறைவுபடும். அதனுல், தேகம் அசௌக்கியமாய்ப் பின்பு வேலை செய்வதற்கும் சக்தி குறைவாகும்.

சீரண விஷயத்தில் மதுசாரத்தின் பயன் சிலவற்றை யிங்கே குறிப்பிடுவோம்.

1. மதுசாரம், சுவையுணருஞ் சூக்கும்ரந்திரங்களை உணர்ச்சியற்றுப் போகச் செய்கிறது. அதனுல், ஆகாரத்தின் நுண் சுவையை நுகர்வதற்கில்லாமற் போகிறது. அது அதிக அளவானுல் சூக்குமரந்திரங்களை அதிகமாகக் கெடுத்துவிடுகிறது. குடியனைச்சர்க்கரையிலிருந்து உப்பையும், வெங்காயத்திலிருந்து இலந்தைப்பழத்தையும் வேறு பிரித்து உணரக் கூடாமற் செய்கிறது.

2. மதுசாரம், உமிழ்நீரின் வலிமையைக்குறைக்கின்றது. அதனுல், சில வேளை பசைமாவுள்ள ஆகாரத்தைக் கரையத்தக்க சர்க்கரையாக மாற்றும் சக்தியை முற்றுங் கெடுக்கின்றது.

3. மதுசாரம், தீபன நீரின் வலிமையைக் குறைக்கின்றது. பீரை அல்லது கள்ளை அதிகமாகக் குடித்தலால் தீபன நீரின்

வலிமை பெரிதுங் குறைகின்றது. சில விஷயங்களில் மதுசாரம் வயிற்றை விட்டு ஒழியும்வரை சீரணம் நடை பெறாமல், தடை படுகின்றது.

மேற்கூறிய உண்மையைச் சோதிக்கும் பொருட்டு, டாக்டர் பெட்டோஸ் (Dr. Beddoes) என்பவர் இரண்டு நாய்க்குட்டிகளுக்குச்சமமான ஆகாரங்கொடுத்தனர்; ஆனால், ஒன்றுக்கு ஆகாரத்தோடு சிறிது மதுசாரமும் தண்ணீருங்கலந்து கொடுத்தனர். பிறகு 5 மணி நேரங்கழித்து மதுசாரஞ் சேராத குட்டியின் வயிற்றைப் பார்த்தபோது, அது உண்ட ஆகாரமெல்லாம் சீரணித்து விட்டதால் அதன் வயற்றில் ஒன்றுமில்லை. மதுசாரமுண்ட குட்டியின் வயிற்றில் ஆகாரம் சீரணிக்காமல் அப்போதுதான் சாப்பிட்ட ஆகாரம் போலிருந்தது.

4. மதுசாரம் ஆகாரங்களைக் கடினமாக்கும் இயல்புடையது. சீரணத்தின் வேலை ஆகாரத்தைக் கரையச் செய்வதாம்; ஆனால், மதுசாரம் ஆகாரத்தைக்கரையவொட்டாமல் காக்கக்கூடியது. ரொட்டி, இறைச்சி, முட்டை, மச்சம், சர்க்கரை இவற்றை மதுசாரத்தில் போட்டுவைத்தால், அவை வெகு நாட்களுக்குக் கெடாமல் முதலில் போட்டபடியேயிருக்கும். அவை, இன்னும் நீண்ட காலம் மதுசாரத்திலிருக்குமாயின் மிகவும் கெட்டியாய் விடும். தண்ணீர் கரைக்கும் இயல்புடையது. மேற்சொன்னவற்றைத் தண்ணீரில் போடுவோமாயின் உடனே அவை அத்தண்ணீரில் ஊறிக்கரைந்து போம். ஆகவே, தண்ணீர் சீரணத்திற்கு உதவியாகிறது. மதுசாரம் அதனைத் தடைசெய்கிறது என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

210374

5. மதுசாரம், ஆகாரத்தைக் கீழ்மேலாகப் புரளச் செய்யும் இரைப்பைத்தசையின் சக்தியைக் குறைக்கின்றது. அதன்பயனாகப் பலகாலும் வயிற்றுக் கழிவு சரியாய் நடவாமல், ஆகாரம் அங்கே தங்கிப் புளிப்பாகி, வாயுசேர்ந்து அசீரணமுண்டாகின்றது.

ஒருவன் தேக வுழைப்பினால் சோர்வடைந்திருக்கும்போது, அதிக ஆகாரம் உண்பானாயின் மேற் சொல்லிய அதே காரணத்தால்

அசீரணமுண்டாகும். ஏனெனின், தேகம் போதுமான ஓய்வடை யும் வரை இரைப்பையின் வலுகுறைந்தும் போதுமான இயக்கச் சக்தி யில்லாமலு மிருக்கும்.

6. மதுசாரம், இரைப்பை குடல்களிவற்றின் உட்புறத்தி லிருக்கும் மிருதுவான தோலில் அழற்சியையும், சிலசமயம் புண்ணையு முண்டாக்கி ஆகாரத்தைச் சரியாகச் சீரணிக்க வொட்டாமல் செய்கிறது. இடைவிடாமல் மதுசாரத்தை மிதமாக உபயோகிப்பதும் தீங்கு செய்வதேயாம். அன்றி யும், அது, அடிக்கடி அசீரணத்தையும் வேறு நோய்களை. யும, வலியையும், துன்பத்தையு முண்டாக்குகின்றது.

வெறியுள்ளமதுக்குடி ஆகாரமாகாது.

அநேக குடியர்கள் பல வகை மதுபானங்கள் ஆகாரமாக உத வக் கூடுமென மூடத்தனமாக நினைக்கிறார்கள்.

தேகமானது தனக்குத் தேவையான ஆகாரத்தை யுதவும்படி கேட்பதே பசியின் உணர்ச்சியாம். குடியர்கள் குடித்த பிறகு பசியடங்கிவிட்டதாக உணருகிறார்கள். அவ்வுணர்ச்சியால் அவர் கள் ஆகாரம் உண்டதாகமாட்டாது. அவர்கள் குடித்த பிறகு பசியை யுணராதிருப்பது உண்மையே. ஆனால், அவர்கள் குடித்த பிறகு என்ன வுண்டாயிற்றென்று அவர்களறிந்தார்களா? இல்லை. என்? ஆகாரங்கேட்க வேண்டிய நரம்புகள் மதுசாரத்தால் உணர்ச்சி யற்றுப் போயின. மதுசாரம் பசியுள்ள மனிதனைப் போஷிக்க வில்லை; ஆனால், அது அவனைப் போஷித்ததாக வுணரும்படி அவனை யேமாற்றி விட்டது. ஒருவன் பசியா யிருபபதைத் தெரி விக்கும் நரம்புகள் மரத்து உணர்ச்சியற்று திமிர் பிடித்திருக்கிறது. இக்காரணத்தைக் கொண்டு அசீரணததால் வயிற்று நோயால் துன்பப்படுகிற குடியன் குடித்த பிறகு, மதுபானந்தான் குணப் படுத்தின தென்று நினைக்கின்றான். அவ்விதமான தொன்று மில்லை. அது, நோயைமாத்திரம் உணர வொட்டாமல் செய்தது; ஆனால், அந்நோய்க்குக் காரணம் அங்கேயேயிருக்கிறது. அக்காரணம் ஒழியாவிட்டால் இன்னும் பலதுன்பங்களுண்டாகும். இஃதெவ் வாறிருக்கின்ற தெனின், வீட்டில் கன்னம் வைக்கும் கள்வர்கள் வரு வதைத் தன்னுடைய நாயினால் எச்சரிக்கப்பட்ட எஜமானன் தனக்கு நேரும் அபாயத்தைக் காட்டின அந்நாயையே சுடுகிறது போலிருக்

கின்றது. கள்வர்கள் வீட்டை விட்டு நீங்காமல் இன்னுந் தங்கள் காரியங்களை நடத்தும்படி வீட்டிலேயே விடப்பட்டிருக்கிறார்கள்.

சீரணத்திற்கு உதவியான சில நல்ல விதிகள்.

1. ஆகாரம் உண்பதில் அவசரம் வேண்டாம். மெதுவாகச் சாப்பிடு.

2. ஆகாரத்தை நன்றாய் மென்று கூழ்போலாக்கிச் சாப்பிடு. அதனை வாயில் போட்டதும் விழுங்காதே.

3. ஆகாரம் உண்ணும்போது இடையிடையே நீரருந்தல் கூடாது. ஆகாரமுண்டு முடிந்த பின்னரே அருந்தல் வேண்டும். அவசியமுண்டானல் இடையில் சுத்தமான நீரருந்தலாம்.

4. மாமிச ஆகாரத்தை மிதமாய்ச் சாப்பிடு. கீரைவகைகள் பழவகைகள் அதிகமாயுண்ணல் வேண்டும்.

5. ஆகாரம் உருசியாயிருக்கிற தென்று அதிகமாக உண்டு வயிற்றை நிறப்பாதே.

6. உண்ணும்போது மனக்களிப்போடிரு.

7. சாதாரண மானதும், நன்றாய் வெந்ததுமான ஆகாரம் உத்தமம்.

8. சுத்தமும் போதுமான காற்றுமுள்ள வெளியிடத்தில் தேகாப்பியாசம் மிகுதியாகச் செய். இல்லையேல் மிதமாகச் சாப்பிடு.

9. மிகவுஞ் சோர்வடைந்திருந்தால், உண்பதற்கு முன் சிறிது நேரம் ஒய்ந்திருப்பது மிகவும் நன்மை தரும்.

பித்தாசயம் அல்லது ஈரல்.

ஈரல் என்பது தேகத்திலுள்ள மிகப் பெரிய கோளமாம் (gland). அது $3\frac{1}{2}$ பவுண்டிலிருந்து $4\frac{1}{2}$ பவுண்ட் நிறையுள்ளது. அது பலவித சூக்குமரந்திரங்களால் அமைந்தது. சில சூக்குமரந்திரங்கள் சர்க்கரையையும், சில, பின்னுக்கு உபயோகப்படும்படி உஷ்ணத்தைக் கொடுக்கும் ஆகாரத்தையுஞ் சேர்த்துவைக்கின்றன. சில கொழுப்பான ஆகாரத்தைச் சீரணிக்கப் பித்தத்தையுண்டாக்குகின்றன. சில, மூத்திரத்தி லுண்டாகும் விஷப்பொருளை அதாவது யூரிக் அமிலத் (uric acid) தைத்தேகத்தினின்றுங் கழிக்கின்

றன. அவ்விஷப்பொருள் தேகத்தினின்றும் கழியாவிட்டால் வாத ரோகங்கள் கீல்வாதம் முதலிய பல கொடிய துன்பங்களுண்டாகும்.

ஈரலில் சூக்குமரந்திரங்கள், தேன்கூடுபோல் அமைந்திருக்கின்றன. அவற்றுள் ஒவ்வொரு வகுப்பும், தேகத்தைச் சுகநிலையில் வைப்பதற்கு வெவ்வேறு வேலை செய்கின்றது.

மதுசாரம், சூக்குமரந்திரங்களுக்கு விஷமானதால் அவற்றை அடியோடு கொல்லாமற் போனாலும் அவற்றிற்குக் கெடுதியை விளைவிக்கின்றது. மதுசாரம் இரைப்பையிலிருந்து ஈரலுக்கு நேரே செல்லுவதால் ஈரலின் சூக்குமரந்திரங்களைக் கெடுத்து அவற்றின் வேலையைச் செய்வதற்குத் தகுதியில்லாமற் செய்கின்றது. அதனாலே அடிக்கடி தேக சுகத்திற்கு ஆபத்துண்டாவது தவறுவதில்லை.

மதுசாரத்தால் ஈரலில் இரண்டு முக்கிய வியாதிகளுண்டாகின்றன. (1) கொழுப்பின் சீர்கெட்டுப்போதல். (2) ஈரல் கடினமாதல். இவ்விரு நோய்களிலும் சூக்குமரந்திரங்கள் தங்கள் வேலையைச்செய்யக் கூடாமற் போகிறபடியால் மரணம் நேரிடுகிறது.

மதுசாரம், முதலில் மேன்மையான சூக்குமரந்திரங்களைத்தாக்குகிறதென்றும், அதுவே, ஆகாரத்தைச் சேர்த்துவைத்துப் பித்தத்தை வெளிப்படுத்தும் சூக்குமரந்திரங்களைத் துன்பப்படுத்துகிறதென்றும் நாம் முன்னமே தெரிந்திருக்கின்றோம். சூக்குமரந்திரங்களைக் கெடுக்கும் மதுசாரம், சீவதாதுக்கு விஷங்களாகும் பாஷாணம் (arsenic), பாஸ்பொரஸ் (Phosphorus) முதலியவற்றைப் போலவே விஷமாகின்றது. ஆயினும், மதுசாரம் அவற்றைப் போல அவ்வளவாகக்கொடிய விஷமாயில்லாவிடினும் அதிக மதுபானஞ் செய்யும் நாட்பட்ட குடியனுடைய ஈரலை நாசமாக்குகின்றது. மதுசாரம், சூக்குமரந்திரங்களுக்கு உயிராகிய சீவதாதுவைக் கெடுத்து, அதற்குப்பதிலாக உபயோகமில்லாதபடி கொழுப்பை அதிகரிக்கச் செய்து, அதன் சீரைக்குலைத்து, ஈரல்வேலை செய்வதற்கில்லாமல் அதன் சக்தியைக்கெடுத்து விடுகிறது. மதுசாரம், ஒரு கிளாஸ் பீர் முதலியவற்றிலிருப்பதுபோலச் சிறிதளவே யாயினும் அது தீங்கு செய்வதேயாகும்.

"மதுசாரத்தை வழக்கமாகச் சிறிதளவே உபயோகித்து வரினும் அதன் பயனாக அடிக்கடி ஈரல் வியாதி உண்டாகின்றது" என்று ஸர் விக்டர் ஹோர்ஸ்லி (Sir Victor Horsley) கூறுகின்றார்.

கணித விநோதம்

(ஸ்ரீரங்கம் T. R. ஸ்ரீனிவாசன் B.A, எழுதியது)

ஒரு அரசனுக்கு நால்வர் மனைவியர். பட்டமஹிஷிக்கு ஒரே புதல்வன். இரண்டாம் மனைவிக்கு இரண்டு புத்திரர். மூன்று வது தாரத்திற்கு மூவர் மக்கள். நான்காம் பத்தினிக்கு நான்கு பிள்ளைகள். ஒரு தினம் அவன் தனக்குக் காணிக்கையாகக் கிடைத்த உயர்ந்த மாம்பழங்களில் ஒன்றை மட்டும் தனக்கெனப் பிரத்தியேக மாய் எடுத்து வைத்துக் கொண்டு மீதியைத் தம் மனைவியருக்கென சரக்கறைக்குக் கொடுத்தனுப்பினன். இது செய்தி முதன் முதல் உணர்ந்த அவன் மூத்த மனைவி அங்கு சென்று மொத்தம் இருந்த பழங்களில் ஒன்றைத் தன் புத்திரனுக்குக் கொடுத்த பின்பு பாக் கியை நான்கு சமபாகங்களாக்கித் தனக்குரிய ஒரு பாகத்தை எடுத் துக் கொண்டு சென்று விட்டாள். சற்று நேரங்கழித்து அங்கு வந்த இரண்டாவது மனைவி ஏற்கனவே நடந்தது அறியாதவளாய் அங்கிருந்த பழங்களில் இரண்டைத் தன் குமாரர்களுக்கு ஆளுக் கொன்றாய்த் தந்த பின்பு மிகுந்ததை நான்கு சமபாக மாக்கித் தன் னுடைய பாகத்திற்கான பழங்களை எடுத்துக் கொண்டேகினள். மூன்றாவது, நான்காவது மனைவியரும் இவ்வாறே தனித்தனி செய் தனர். பின்பு, தான் கொடுத்தனுப்பிய பழங்களைத் தம் மனைவிய ரிடையே பாகம் செய்து கொடுப்பதற்கென சற்று நேரத்திற் கெல் லாம் அங்கு வந்த அரசன் அவைகளை மறுபடியும் நான்கு சரி கூறுக ளாகச் செய்தான். ஆனல் அவ்வாறு செய்வதற்கு மேலும் ஒரு பழம் வேண்டியிருந்தது கண்டு முன்னம் தான் எடுத்து வைத்தி ருந்த ஒரு பழத்தையும் சேர்த்துச் சமபாகங்களாக்கித் தன் மனைவி யருக்குக் கொடுத்தான். அவ்வாறானல் அவனுக்குக் காணிக்கை யாகக் கிடைத்த மாம்பழங்கள் எவ்வளவு ?

2. நான் நிரம்ப நாளாய் பிரமசாரி. எனக்கு விவாகம் செய்து கொள்ள வெகு ஆசை. ஒரு பெரியவர் எனக்கு மூன்று மஹிமை பொருந்திய மந்திரங்களை உபதேசித்து பிரதிதினம் தவறா மல் கணேசர், பார்வதி, மஹா லக்ஷ்மி மூவரையும் ஒரு குறித்த காலம்வரை மலர் கொண்டு பூசனை புரிந்து வரச் சொல்லி யிருக்கி றார். அவ்வாறே நாடோறும் நான் அதிகாலையில் பரிசுத்தமாய்க்

குடலை யொன்றில் புஷ்பங்கள் எடுத்துக் கொண்டுபோய் மூன்று தெய்வங்களையும் அருச்சித்து வணங்கி வழிபட்டு வருகிறேன். பெரியவர் அருளிய மந்திர மஹிமை யாதெனில்: மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு நான் முதன் முதலாக கணேசர் ஆலயத்தில் புகுந்ததும் என் குடலையில் உள்ள புஷ்பங்கள் பத்து மடங்கு அதிகரிக்கின்றன. பின்பு ஒரு குறித்த தொகையுள்ள மலர்களால் நான் விநாயகரைப் பூசிக்கிறேன். பிறகு பார்வதி தேவியின் சந்நிதானம் செல்லுகிறேன். அங்கு அத்தேவிக்குரிய மந்திரோச்சாடனம் செய்ய வேண்டுவதுதான் தாமதம். என்னிடமுள்ள மலர்களின் தொகை இருபது மடங்காய்ப் பெருகுகின்றது. பார்வதி தேவிக்கும், விநாயகருக் கெவ்வளவோ அத்துணை மலர்கள் தான் அருச்சிப்பது. கடைசியாக மஹாலட்சுமியின் கோவில் புகுகையில் மந்திரத்தை மனதால் நினைத்த அளவில் என்னிடத்திலுள்ள பூக்கள் முப்பது மடங்காக மல்கி விடுகின்றன. முன்போலவே குறிதத மலர்கொண்டு நான் பூசித்துத் திரும்பும்போது பார்த்தால் என் குடலை ஒரு புஷ்பமும் மிகுதியின்றி காலியாயிருக்கிறது. அப்படியானல் நான் எவ்வளவு மலர்களுடன் அனுதினம் பூசனைக்குப் புறப்படுகிறேன்? ஒவ்வொரு தெய்வத்திற்கும் நான் இடும் மலர்கள் எவ்வளவு தொகையின?

(தொடரும்)

(கடோரசித்தன் கதை :240-ம் பக்கம் தொடர்ச்சி)

அச்சமயம் உச்சியைச் சமீபித்த அந்தக்கல்லும் 'கடகடகட' என உருண்டு வீழ்ந்தது. நாரதர் கூறியதைக் கேட்டும் இந்தக்கல் கீழே விழுந்ததைக் கண்டும் சற்றும் மனஞ் சலியாது கடோரசித்தப் பேய் "போங்காணும், யோசனை யில்லாதவரே! உச்சியிற் சேராவிட்டால் என்ன கெட்டுப்போயிற்று. ஒன்றுங் கெட்டுப்போகவில்லை. ஒரு காலத்தில் உச்சியில் சேரும் இக்கல் என்றும் ஓயா உணர்ச்சியே ஓயா இன்பம். இதை நீர் அறிந்திலீர் போலும்." எனக் கூறிக்கீழே விழுந்த கல்லை மேலே உருட்டிக்கொண்டே நகைத்தது.

முற்றிற்று.

[குறிப்பு: —இக்கதை ஆங்கிலத்தில் Lrod Lytton எழுதிய "Death and Sisyphus" என்னும் நூலைத்தழுவி எழுதப்பட்டது].

இனும்!   இனும்!!

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட

Self filling பௌண்டன் பேனு இனும்.

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லிய படி பௌண்டன் பேனு இனுமாய் அனுப்பப்படும்.

கெடியாரம் விலை ரு. **4-12-0.**

5 வருஷம் உத்திரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.



இதை மேஜையின்பேரிலும் சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே இக்கயிற்றின் (Wire) உதவியால் இதை எரியவும் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் அணையாது. விசேஷ காலங்களில் இதை வைத்தால் அதிசயத்தைப் பார்ப்பதற்கு ஜனங்கள் கும்பலாகக் கூடிவிடுவார்கள். மிக ஜாக்கிரதையாகப் பாக்கிங் செய்து அனுப்பப்படும்.

பாட்டரியுடன் லைட் விலை ரு. **4—8—0.**

தபால் செலவு **0—8—0.**

தி பான்ஸி வாட்சு அவுஸ். 15, A பீட், ஜி. டி. மதராஸ்.

நல்ல சமயம்!   வாங்கத் தவறாதீர்கள்!!

பாரீஸ் லேடிகளின் அழகிய போட்டோ படங்கள்.

இதில் பாரீஸ் லேடிகளின் அழகும் விநோதமும் காணலாம். பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத கண் காக்ஷியாகும். படுக்கை யறையில் ஜோடிக்க வெகு சுந்தரமாயிருக்கும். உண்மையான பாரீஸ் படங்கள் நம்மிடந்தான் உண்டு.

பல ரகமுள்ள 1 டஜன் செட்டுக்கு ரு. **3—0—0.**

பாரீஸ் எம்போரியம்,
ஜி. டி. மதராஸ்.

காலத்திற்கேற்ற நூல்! காதலர்கள் தேடும் நூல்!

நீங்கள் நெடுநாட்களாய் எதிர்பார்த்திருந்த

இரகசிய புஸ்தகம் தயாராகி விட்டது!

இல்வாழ்க்கையின் - - - - - இரகசியங்கள்

சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம்.

அழகான பயிண்டு. நேர்த்தியான அச்சு.

விலை ரூபா **2—0—0.**

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

துறவிகளின் கதியென்ன?

இல்வாழ்க்கை என் சிறந்தது?

இல்லறத்திலிருந்து மோக்ஷ மடைவ தெப்படி?

பெண்ணின் பெருமை, பெண்கல்வி.

நாணம் எப்படி உண்டாயிற்று?

நாணமுள்ள ஸ்திரீயே அதிக இன்பந் தரக்கூடியவள்.

நாம் என் உடைதரிக்க வேண்டும்?

நிர்வாணமாயிருப்பதின் தத்துவ மென்ன?

ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடை பெறுகின்றன? உண்மையான கலியாணம் எது?

காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்கு முள்ள வித்தியாசம்.

சாந்தி முகூர்த்தத்தில் எப்படி வெற்றியடைவது?

மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?

கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?

தமக்குச் சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டுகொள்வது?

ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது?

அவர்களிடத்தில் அமிர்தநிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?

P. T. O

பலஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.

சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.

ஸ்திரீ புருஷர்களின் மர்ம அங்கங்களின் அமைப்பும் அவைகளின் நேர்மையான உபயோகமும்.

ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன ?

சங்கம காலத்தில் கடிப்பது, கிள்ளுவது, தலைமயிரைப் பிடித்திழுப்பது இன்னும் பல தொழில்களால் அதிகமான இன்பம் பெறல்.

மனம்போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.

கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்து கொள்ள வேண்டிய முறைகள்.

சுகப்பிரசவத்திற்கு வேண்டிய மார்க்கங்கள். பிரசவித்த குழந்தையைப் பிரசவகாலத்தில் ரக்ஷிக்கும் சிரமம்.

முதல் மாதத்திலிருந்து கடைசிமாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.

ஸ்திரீகள் மலடாவதுண்டா ? உண்டானல் அதற்குக் காரணம் ? அதைப் போக்கடிக்கும் விவரம்.

புருஷர்கள் மலடாவதுண்டா ? எங்கு பார்ததாலும் ஏன் ஆண்மலடு விசேஷமாயிருக்கிறது ? இதைப் போக்கிக் கொள்ளுவதெப்படி ?

அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினல் நாட்டுக்கு நன்மையா, தீமையா ? தீமையாயின் அதைத்தடுக்க உபாயம் என்ன ? ஸ்திரீ புருஷர்கள், சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்க முடியுமா ? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைன, துருக்கி முதலிய விடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர் ? சிசுகொலை அநியாயம்.

நண்பர்களே ! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன் போன்ற இரகசிய விஷங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

வாலன் புஸ்தகசாலை,

தபால் பெட்டி 119,

97, அண்ணபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்.

தேக ஆரோக்யத்தைக் — —

— — — கவனியுங்கள்!

குளிர்காலத்தில் தேக ஆரோக்யத்தைக் காப்பாற்றுவது மிகவும் இன்றியமையாதது. குளிர்கால உபயோகிப்புக்கென்றே நானாவிதமான கம்பளிப் போர்வைத் தினுசுகள் ஏராளமாய் ஸ்டாக் செய்திருக்கிறோம். குளிர்காலம் ஆரம்பித்து விட்டதால் ஆர்டர்கள் வந்து குவிகின்றன. நீங்களும் உங்கள் ஆர்டரை உடனே அனுப்பிவிடுங்கள்!

நெ. 1 ஜெர்மன் கம்பிக்கரைப் போர்வை 1க்கு **9-8-0**

நெ. 2 பாரிஸ் பூக்கரைப் போர்வை 1க்கு **10-8-0**

நெ. 3 ஷை உசத்தி பெரிய சயிஸ் 1க்கு **16-0-0**

நெ. 4 காஷ்மீர் கைநெசவு போர்வை 1க்கு **12-0-0**

நெ. 5 ஜெர்மன் மேகவர்ணப் போர்வை உசத்தி 1க்கு **15-0-0**

K. S. Muthiah & Co.,

EXPORT DEPT.

Post Box 99, :: :: MADRAS.

30 வருடகாலமாய் உலக பிரசித்தி பெற்ற

வைத்யரத்ன பண்டிட் D. கோபாலாச்சார்லு அவர்களின்

ஆரோக்கியத்தையும், தைரியத்தையும், உண்டாக்கும்.

ஜீவாமிருதம்

பலத்தையும் உற்சாஹத்தையும், விருத்தியாக்கும்.

ரத்தத்தை விருத்தியாக்கும், மேகவாதநோய்களை போக்கடிக்கும், எல்லாவித பலஹீனங்களையும் போக்கும்ரோகிகளுக்கு நல்லது, மாரதிர்ச்சியை போக்கும், கற்பகாரகங்களை நீக்கும், குழந்தைகளுக்கும் கர்பவதிகளுக்கும் உத்தமம், முலைப்பாலை விருத்தியாக்கும், மூர்ச்சைகளுக்கு நல்லது மூளைக்கு வலுவையுண்டாக்கும், நரம்புகளுக்கு வலிவை ஜாஸ்தி கொடுக்கும், வித்யார்த்திகளுக்கு பிராணமித்திர மானது, பிராண சக்தியை ஜாஸ்தியாக்கும் க்ஷய ரோகிகளுக்கு மிகவும் நன்று, காஸரோகிகளுக்கு அமுர்தம் போன்றது, மாருக்கு அதிகபலத்தை கொடுக்கும், ஸ்வாசப்பைகளுக்கு அதிக பலமுண்டாக்கும், உப்பஸ ரோகிகளுக்கு ரெம்பவும் ஹிதம்.

ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும், லோஹங்களாலும் தயார் செய்யப்பட்டது.

விலை புட்டி 1-க்கு ரூபா **3—4—0.**

உபயோகவிதி மருந்துடனனுப்பப்படும்.

முழுவிபரம் அடங்கிய கேட்லாக் இனமாய் அளிக்கப்படும்.

ஆயுர்வேதாஸ்ரமம்,

151, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, **Post Box 287, Madras.**

உபயோகித்து ஸ்திரீகளுக்கு சுகப்பிரசவசஞ்சீவியெனமதிக்கப்பட்ட

சுகப்பிரசவ மாத்திரைகள்.

அபாயமின்றி அதி சீக்கிரத்தில் வேதனையில்லாமல் சிசுவை ஆரோக்கியமாய் பிறக்கச் செய்கிறது.

(நியோ ஈசி டெலிவரிபில்ஸ் Neo Easy Delivery Pills.)

புட்டி 1-க்கு ரூ. 2—0—0.

நியோ பால்டு க்யூரா. Neo Bald Cura.

(நியோவழுக்கை நிவாரணி)

தலை வழுக்கை, முக வழுக்கை, சொட்டை, சுண்டு, முதலிய வற்றை எவ்வளவு நாள் பட்டதாயினும் நிவர்த்திக்கும், மயிரை அடர்ந்து தடித்து வளரச் செய்யும், மயிர் விழுவதை நிறுத்தும். அநேகரால் உபயோகித்து குணமடையச் செய்த சிறந்த சிரோ ரோக நிவாரணி. புட்டி 1-க்கு ரூ. 1—8—0.

நியோ பிலட் டானிக் Neo Blood Tonic.

(நியோ இரத்த சுத்த விருத்தி திரவம்.)

கெட்ட ரத்தத்தை சுத்தி செய்து திரேக பலத்தையும், ஆரோக்கியத்தையும் தரக்கூடியது. புட்டி 1-க்கு விலை ரூ. 3-8-0.

நியோ காலரா ட்ராப்ஸ் Neo cholera Drops.

(காலரா நிவாரணி)

இரண்டொரு தடவை கொடுத்தவுடன் மலப்போக்கை நிறுத்தி சொஸ்தப் படக்கூடிய ஓர் கைகண்ட சிறந்த ஔஷதம். விலை புட்டி 1-க்கு ரூ. 1—4—0.

நற்சாக்ஷிப் பத்திரங்கள்.

Neo Scientific Pharmacy—ல் கிடைக்கும் Easy Delivery Pills களை நான் என் குடும்பத்தில் இரண்டு பிரசவங்களுக்கு கொடுத்ததினால் ஷை மாத்திரைகள் மிகவும் சுகமாகவும் குழந்தைக்கும் தாயாருக்கும் யாதொரு அபாயமுமின்றி சீக்கிரத்தில் குழந்தையை வெளியாக்குகிறது. நான் இதுவரையில் இவ்வளவு சுகமான மாத்திரைகள் பார்த்ததில்லை. இந்த மாத்திரைகளுக்கு சுகப்பிரசவ சஞ்சீவினி என்றும் பெயர் கொடுக்கலாம்.

(Sd) S. ராஜம் அய்யர், மிட்டாதார், பானாம்பட்டு.

கிடைக்குமிடம் :—

Neo Scientific Pharmacy, Villupuram S. I. Ry.

நியோ சயின்டிபிக் பார்மசி, விழுப்புரம்.

ஏஜண்டு:—மேசர்ஸ். தாதா அண்டு கோ.,

சைனாபஜார் ரோட், மதறாஸ்

HALF-TONE BLOCKS.

Copper 8 as. Square inch.

Zinc 6 as. Square inch.

LINE BLOCKES.

Copper 10 as. Square inch.

Zinc 4 as. Square inch.

Special Drawings if any will be charged. Charges for extra. Enlargement of photos and oil paintings On enquiry.

2 Months Only

INNER 15"×12" Rs 7-8 OUTTER 20"×16"

SIZE.

Send Your Photos for Bromide

Enlargements Highly Finished as Life Like

PRINCE STUDIO

ARTISTIC PHOTOGRAPHERS

HALFTONE BLOCK MAKERS.

90. W. RD. MOUNT ROAD. MADRAS.

மோட்டார் வண்டிகட்கு

யூனிவெர்ஸல் பாட்டரி



யூனிவெர்ஸல் பாட்டரி

பாட்ரி வேண்டும் போது அமெரிக்காவில் செய்யப்படும் பாட்ரிகளில் தலைமை ஸ்தானத்தை வகிக்கும் யூனிவேர்ஸல் பாட்ரி வாங்குங்கள். நாங்கள் உத்திரவாதம் எழுதித் தருகிறோம்.

இந்தியாவுக்கு சோல் ஏஜண்ட்கள் :—

ஸ்டாண்டர்ட் மோட்டர் எலெக்ட்ரிக் ஒர்க்ஸ்

மோட்டர் எலக்ட்ரிக் எஞ்சினீயர்கள், 33, மவுண்ட்ரோட், சென்னை.

குழந்தைகளை : : : : நேசியுங்கள்!



அழுகிற குழந்தைகளை அடிக்கவேண்டாம். உங்கள் அருமைக்குழந்தைகளை, எப்பொழுதும் குதூகலப்படுத்த நமது "விளையாட்டு சாமான்கள்" செட் ஒன்றை வாங்கிக் கொடுங்கள். குழந்தைகளின் மனதை ரம்மிக்கச் செய்யும், இந்தியர்களின் வீட்டில், சமையல் செய்யும் பாத்திரங்களைப்போன்றவடிவுள்ளவை, ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 சாமான்கள் அடங்கியிருக்கின்றன, அவை முற்றிலும் பித்தளையினல் செய்யப்பட்டு, மிகுந்த அழகோடிருக்கும். இந்த விளையாட்டு சாமான்கள், இந்துக்களாலும், மகமதியர்களாலும், கிறிஸ்தவர்களாலும், ஆங்கிலேயர்களாலும் மதிக்கப் பெற்றவை

நெ. 1 செட் 1-க்கு விலை ரூ. 4—8—0

நெ. 2 „ „ விலை ரூ. 3—4—0

கே. எஸ். முத்தையா கம்பெனி,

வில்க் ஹவுஸ் : :: காசி

210374

கராச்சி பேட்டர்ன் சில்க் புடவை

இந்தப் புடவையின் உடல் சாதா, விளிம்புக் கரைக்கு, ஜரிகையினால், "கிளாவர்" "உத்ராக்ஷம்" "சங்கிலித் தொடர்" முதலியவை மாதிரி நெசவு செய்தது. முகதலைக்கு 4" ஜரிகை பட்டைக் கரை யுள்ளது. சிறிய கரையுள்ள புடவைகளை விரும்பும், ஸ்திரீகளுக்கு, இந்தப் புடவை மிகுந்த திருப்தியையும், சந்தோஷத்தையும் கொடுக்குமென்பதில் சந்தேக மில்லை.

No. 1.	16 மு x 44 இஞ்சி புடவை	1	ரூ.	38	0	0
	18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	44	0	0
No. 2.	16 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	30	0	0
	18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	36	0	0

பெங்களூர் பேட்டர்ன் புடவை

பெங்களூர் புடவை மாதிரி 4 கரையும் முகதலையு முள்ளது. உடல் நெசவு அழுத்தமா யிருப்பதோடு, மிருதுவாகவும், பளபளப்பாயு மிருக்கும். கரையில் இரட்டை ஜரிகை உத்ராக்ஷம் திராக்ஷை கொடி (Lacha) முதலியவை நெசவு செய்யப்பட்டது.

16 மு x 44 இஞ்சி புடவை	1	ரூ.	52	0	0
18 மு x 44 இஞ்சி ,,	1	ரூ.	60	0	0

இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

K. S. MUTHIAH & CO.

EXPORT DEPARTMENT

Post Box 99, **MADRAS.**

Show room 287, Esplanade, *Phone : No. 2693.*

முத்தையாஸ் - -

- நியூமாடல் புடவை

ஒன்று வாங்க மறந்துவிடாதீர்கள்

நவீன நாகரீகத்திற் கேற்ற மாதிரியில் புதிதாகச் செய்யப்பட்ட புடவை. அழகான 1-அல்லது $1\frac{1}{2}$ இஞ்சி ஜரிகை வேலைக் கரையுடனும், 6 முதல் 8 அங்குலம் வரையுள்ள ஜரிகை முந்தாணியுடனும் கூடியது. கண்ணைக் கவரும், பிங், ரோஸ், பச்சை, கத்தரிப்பூ, ஊதா, வெள்ளை, ஸ்கைப்புளு, முதலிய பல கலர்களில் கிடைக்கும். உடல் அழுத்தமாகவும், நைஸாகவும், பளபளப்பாகவும், நீடித்த உபயோகிப்பிற்கு வரக் கூடியதாயு மிருக்கும்.

16 மு x 44'' புடவை 1-க்கு ரூ. 45 முதல் 80 வரை.

K. S. MUTHIAH & CO.,

EXPORT DEPARTMENT

Post Box 99, - - - MADRAS.

Show room : 287, Esplanade. *Phone : No. 2693.*

Printed at Muthiah Press, Madras and Published by K. S. Sundarar.